சுவிட்சம்

SUPEEDSAM e-PAPER
www.Supeedsam.com

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

04 புதன்கிழமை நவம்பர் 2026 | 04 Wednesday November 2026

Switzerland Edition

Danalakshmi
GROSSISTE DES GOÛTS DU MONDE
உலக உணவுப் பொருட்களின் மொத்த விற்பனையாளர்
01 84 74 96 80 | danalakshmi.fr | 15 Impasse Bloch Prager 93120 La Courneuve, France
மொத்த விற்பனை மட்டும்

Baubeginn Januar 2027
MULTI CONSULTING Versicherung & Finanz
8424 Embrach (ZH)
வீடுகள் விற்பனைக்கு
Wohnung | Wohnung | Wohnung
4 x 5.5 Zimmer | 4 x 3.5 Zimmer | 4 x 2.5 Zimmer
079 765 50 57 | 8180 Bülach

IMPORTAS International Foods & Beverages
உலகின் சுவைகள் உங்களுக்கு அருகில்
CASH & CARRY • GROSSHANDEL
ZÜRICH RETAIL SHOP
Importas Cash & Carry
Baslerstrasse 102, 8048 Zürich (80 m vom Letzipark)
TEL +41 43 343 03 55
FAX +41 43 343 03 56
EMAIL info@importas.ch
OPENING HOURS Mon-Fri 10:00-20:00 Sat 09:00-18:00
BERN RETAIL SHOP
Importas Cash & Carry
Kranichweg 8, 3074 Muri bei Bern
TEL +41 31 951 24 44
EMAIL bern@importas.ch
OPENING HOURS Mon-Fri 09:00-19:00 Sat 08:00-18:00
www.importas.ch

ROMANDA IMMO
BUCHHALTUNG GMBH
Tivolistrasse 1
6006 Luzern
079 486 59 04
info@ribgmbh.ch
www.ribgmbh.ch

SPITEX UNICARE AG
• MENSCHLICH
• ZUVERLÄSSIG
• IN IHRER REGION
076 581 44 45 | spitexunicare.ch

KAMAL KREDIT
HYPOTHEK & IMMOBILIEN
வங்கிக்கடன் | வீட்டுக்கடன் (Hypothek) | ஆயுள் காப்புறுதி
இன்றே தொடர்புகொள்ளுங்கள்!
043 333 5971 | 079 650 2615
swissenthu@hotmail.com | info@kamalkredit.ch | Zuercherstrasse 47b, 8426 Lufingen | www.kamalkredit.ch

AERO COURIER
உங்கள் உறவுகள்... எங்களால் இணைகிறது...
100% SATISFACTION GUARANTEE
சுவிட்சர்லாந்திலிருந்து இலங்கைக்கு விமானம் மூலம் குறைந்த விலையில் உங்கள் பொதிகளை 10 நாட்களுக்குள் உங்கள் உறவினர்களின் கைகளில் கிடைக்கப்பெற இன்றே நாடுங்கள்!
ஒரு கிலோவிற்கு 7.00 CHF மட்டுமே!
BEST PRICE
Neugasse 60, 8005 Zürich | 079 591 16 66 | 076 384 15 80 | www.aerocourier.com

SPITEX XUNDHEIT PLUS
தமிழ் மொழியில் பராமரிப்பு சேவைகள்
அன்பான கவனிப்பு
நம்பகமான சேவை
உங்கள் தாய்மொழியில்
044 202 05 25 | 079 904 25 25 | www.spitexxundheitplus.ch

VTS Finance GmbH
IMMOBILIEN | HYPOTHEKEN & FINANZIERUNGEN | VERSICHERUNGEN | KREDITE
2027 மருத்துவக் காப்பீடு மாற்றத் தயாரா?
இப்போதே தொடர்புகொள்ளுங்கள்!
078 920 58 58 | info@vtsfinance.ch
Immobilien • Hypotheken • Versicherungen • Kredite

SKY AUTO AG
SKY Auto AG
Libellenweg 21
3006 Bern
Hotline: 031 930 70 80

ELLAALAN SWITZERLAND
Importer | Distributor | Wholesaler
Felsweg 1
5727 Oberkulm AG
Switzerland
info@ellaalan.ch
www.ellaalan.ch
+41 41 870 88 44
+41 79 888 88 44

SRI JEWELLERY
Mattengasse 17, 8005 Zurich
043 366 80 09
079 898 51 01
info@srijewellery.ch

AADAA FINANCE GmbH
aaDaa Finance 079800100
உங்கள் எதிர்காலத்திற்கு சரியான நிதித் திட்டமிடல்!
தனிநபர் கடன் Privatkredit CHF 3'000 – 250'000 ஒன்லைனில் விண்ணப்பிக்கலாம்
மருத்துவக் காப்பீடு Krankenkasse அடிப்படை மற்றும் கூடுதல் காப்பீடு பிரீமியம் ஒப்பீடு • ஆலோசனை
ஆயுள் காப்பீடு Lebensversicherung Säule 3a • 3b • Risiko குடும்பப் பாதுகாப்பு • ஓய்வுக்காலத் திட்டம்
தனிப்பட்ட ஆலோசனை • Switzerland முழுவதும் சேவை
079 800 01 00
ஆலோசனைக்கு இன்றே தொடர்புகொள்ளுங்கள்!
www.aadaafinance.ch

www.thisistamil.co
தமிழின் தாரகை அக்கினி fm
அக்கினி வானொலியை கேட்க...
CLICK HERE

சுவீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

04 புதன்கிழமை நவம்பர் 2026 | 04 Wednesday November 2026 | Switzerland Edition





சுவிஸ் குடியுரிமை:

10 ஆண்டுகள் காத்திருப்பை 5 ஆண்டுகளாகக் குறைக்கலாமா?



சுவிட்சர்லாந்தில் சாதாரண குடியுரிமை பெறுவதற்கான வசிப்புக் காலத்தைப் பத்து ஆண்டுகளிலிருந்து ஐந்து ஆண்டுகளாகக் குறைக்கக் கோரும் மக்கள் முன்முயற்சி, 2027 பெப்ரவரி 28ஆம் திகதி வாக்கெடுப்புக்கு வருகிறது.

செய்தியை தொடர்ந்து வாசிக்க... CLICK HERE

பெறுமதிமிக்க ஓர் இளைய தலைமுறையை நாம் சுவிட்ஸர்லாந்து மண்ணுக்கு வழங்கியுள்ளோம்

செங்காலன் மாநகர தலைவர் துரைராஜா ஜெயக்குமார்



சுவிட்ஸர்லாந்து மண்ணுக்கு நாம் வழங்கியிருப்பது பெறுமதிமிக்க ஓர் இளைய தலைமுறை எமது மூத்த தலைமுறை என்னென்ன அனுபவங்களைக் கடந்து வந்தது என்பதை இந்த இளைய தலைமுறைக்குச்

செய்தியை தொடர்ந்து வாசிக்க... CLICK HERE

சுவிஸில் குளிர்கால சுவாச நோய்கள்:

காய்ச்சல், COVID-19, RSV குறித்து அறிந்திருக்க வேண்டியவை



செய்தியை தொடர்ந்து வாசிக்க... CLICK HERE

ட்டம் இருந்தும் வேலை கிடைப்பதில் தாமதம்:

மாற்றுத் தொழில்களை நாடும் சுவிஸ் இளைஞர்கள்!

பல்கலைக்கழகப் பட்டம் மற்றும் முதுமாணிப் பட்டம் பெற்ற இளைஞர்களுக்குக்கூட சுவிட்சர்லாந்தில் வேலை கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதாகச் செய்தி வெளியாகியுள்ளது. நீண்டகால வேலைதேடலால்,

செய்தியை தொடர்ந்து வாசிக்க... CLICK HERE

SPITEX
XUNDHEIT PLUS

ANGEHÖRIGENPFLEGE

உறவினர் பராமரிப்பு

தமிழ் மொழியில் பராமரிப்பு சேவைகள்

- அன்பான கவனிப்பு
- நம்பகமான சேவை
- உங்கள் தாய்மொழியில்



வீட்டிலேயே
அன்புடன் பராமரிப்பு

ஒரு மணித்தியாலத்திற்கு ஊதியம்
உங்கள் குடும்பத்தினரை வீட்டிலேயே கவனித்து,
நியாயமான ஊதியம் பெறுங்கள்.

CHF 35.- முதல்

Pflegehelfer/in Ausbildung

இலவசம்

உங்களிற்கான நன்மைகள்

- உங்கள் பழக்கப்பட்ட வீட்டிலேயே பராமரிப்பு
- முறையான மற்றும் நியாயமான ஊதியம்
- தொழில்சார் மேற்பார்வையும் தனிப்பட்ட வழிகாட்டலும்



சேவை வழங்கப்படும் பகுதிகள்

Aargau | Basel-Landschaft | Basel-Stadt | Bern | Freiburg | Glarus | Graubünden | Luzern | Schwyz | Solothurn | St. Gallen | Uri | Zürich

அனைத்து சுவிஸ் மருத்துவக் காப்பீடுகளினாலும் அங்கீகரிக்கப்பட்டது

மேலதிக விபரங்களுக்கு இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்

ZÜRICH
Birmensdorforstrasse 360 - 8055 Zürich
044 202 05 25 - 079 904 25 25

UZNACH
Zürcherstrasse 25 - 8730 Uznach
055 290 25 25 - 079 901 25 25

info@spitexxundheitplus.ch
www.spitexxundheitplus.ch

பெறுமதிமிக்க ஓர் இளைய தலைமுறையை நாம் சுவிட்ஸர்லாந்து மண்ணுக்கு வழங்கியுள்ளோம்

செங்காலன் மாநகர தலைவர் துரைராஜா ஜெயக்குமார்

சொல்ல வேண்டிய கடமை எமக்கிருக்கிறது அந்தப் பணியைத்தான் கமலினி கதிர் இந்தப் புத்தகத்தின் மூலம் செய்திருக்கிறார். அதற்காக அவருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் என செங்காலன் மாநகர தலைவர் துரைராஜா ஜெயக்குமார் தெரிவித்தார்.

எழுத்தாளர் கமலினி கதிர் எழுதிய தேடல்கள் 2 நூல் அறிமுகவிழா சூரிச்சில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

ஊடகவியலாளர் சண் தவராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட முதல்வர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

சுவிட்ஸர்லாந்தில் எமது மூத்த தலைமுறையினர் விதைத்த விதைகள் இன்று அடுத்த தலை முறையாக வளர்ந்து வருவதைப் பார்க்கும்போது எனக்கு மிகுந்த பெருமையாக இருக்கிறது.

வெறும் 38 வருடங்களில் இவ்வாறான ஒரு நிலையை எவ்வாறு அடைய முடிந்தது என்று கேட்டால், அதற்குப் பின்னால் இருப்பது நமது உழைப்பும், சிந்திய வியர்வையும், கடந்து வந்த பாதையும்தான்.

நீங்கள் விதைத்த விதைகள் இன்று அடுத்த தலைமுறையாக வளர்ந்து வருவதைப் பார்க்கும்போது எனக்கு மிகுந்த பெருமையாக இருக்கிறது.

என்னைத் தொடர்புகொள்ளும் இளையவர்களைப் பார்க்கும்போது, அவர்கள் சிறுவர்களாக இருந்த காலம் நினைவுக்கு வருகிறது. அன்று என்னை 'ஜெயக்குமார் அங்கிள்' என்று அழைத்த பிள்ளைகள், இன்று பல்வேறு துறைகளில் உயர்ந்த நிலைகளில் இருக்கிறார்கள். நிறுவனங்களின் பிரதம நிறைவேற்று அதிகாரிகளாகவும், பெரிய பொறுப்புகளில் தலைமைத்துவம் வகிப்பவர்களாகவும் இருக்கிறார்கள்.

இந்த மண்ணுக்கு நாம் வழங்கியிருப்பது பெறுமதிமிக்க ஓர் இளைய தலைமுறை.

எமது மூத்த தலைமுறை என்னென்ன அனுபவங்களைக் கடந்து வந்தது என்பதை இந்த இளைய தலைமுறைக்குச் சொல்ல வேண்டிய கடமை எமக்கிருக்கிறது. அந்தப் பணியைத்தான் அக்கா இந்தப் புத்தகத்தின் மூலம் செய்திருக்கிறார். அதற்காக அவருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், இந்த நூலை மொழிபெயர்த்த சகோதரருக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சுவிட்சர்லாந்தில் வாழும் நீங்கள், உங்கள் பிள்ளைகளுக்கும் மாணவர்களுக்கும் தமிழைக் கற்பிக்கிறீர்கள். ஆனால் மற்ற நாடுகளில் எல்லோருக்கும் இதே வாய்ப்பு கிடைப்பதில்லை. அவ்வாறானவர்கள் இந்த நூலை வாசிப்பதற்கு ஆங்கிலம் ஒரு சிறந்த ஊடகமாக அமைகிறது. அந்த வகையில், இதனை மொழிபெயர்த்த சகோதரருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு விடயத்தையும் உங்களிடம் சொல்ல விரும்புகிறேன். நான் உங்களில் ஒருவன். எனவே, என்னுடன் கதைப்பதற்கோ, பேசுவதற்கோ, தொடர்புகொள்வதற்கோ நீங்கள் தயங்க வேண்டியதில்லை.

எனக்கு வந்த பல தொடர்புகளுக்கு இம்முறை பதிலளிக்க முடியாமல் போயிருக்கிறது. நாங்கள் தொடர்ந்து தொடர்பில் இருப்போம். ஒன்றிணைந்து உழைப்போம். நாம் அடைய வேண்டிய உயரங்கள் இன்னும் பல இருக்கின்றன. எம்மை அந்த உயரங்களுக்கு அழைத்துச் செல்லப்போவது எமது அடுத்த தலைமுறைதான். அந்தத் தலைமுறையினர் இங்கு வந்திருப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது.

நான் ஓர் எழுத்தாளனோ பேச்சாளனோ அல்ல. மக்கள் கொண்டாடும் இத்தகைய நிகழ்வுகளில் பங்கேற்பதையும், அவர்களது மகிழ்ச்சியில் பங்குகொள்வதையும், உழைத்தவர்களுக்கு மதிப்பளிப்பதற்கான வாய்ப்பாகவே பார்க்கிறேன்.

எல்லா இடங்களுக்கும் செல்வதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைப்பதில்லை. பல இடங்களுக்குச் செல்ல முடியாத சூழ்நிலையும் இருக்கிறது. நீங்கள் அழைத்த நிகழ்வுகளுக்கு என்னால் வர முடியாமல் போயிருந்தால், அதற்காகவும் இந்தத் தருணத்தில் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

பட்டம் இருந்தும் வேலை கிடைப்பதில் தாமதம்: மாற்றுத் தொழில்களை நாடும் சுவிஸ் இளைஞர்கள்!



சிலர் தாம் கற்ற துறைக்கு வெளியே உணவு விநியோகம் மற்றும் உணவகப் பணிகள் போன்ற தொழில்களை நாடுகின்றனர்.

சூரிச் வேலைவாய்ப்பு அலுவலகத் தகவலை மேற்கோள்காட்டும் செய்தியின்படி, 30 வயதுக்குட்பட்ட பல்கலைக்கழகப் பட்டதாரிகள் வேலை பெறச் சராசரியாக 141 நாட்கள் எடுத்துக்கொள்கின்றனர். இது இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரைவிட சுமார் இரு வாரங்கள் அதிகம். எனினும், பதிவுசெய்யப்பட்ட அனைத்து வேலை தேடுவோருக்குமான கன்டன் சராசரியான 227 நாட்களைவிடக் குறைவாகவே உள்ளது.

நிறுவனங்கள் அனுபவமுள்ளவர்களை அதிகமாக எதிர்பார்ப்பதும், ஜெர்மன் அல்லது பிரெஞ்சு மொழித்திறனுக்கு முக்கியத்துவம் அளிப்பதும் புதிய பட்டதாரிகளுக்குச் சவாலாக இருப்பதாக வேலைவாய்ப்பு அலுவலகங்கள் தெரிவிக்கின்றன. விண்ணப்ப அனுபவம், தொழில்சார் தொடர்புகள் குறைவாக இருப்பதும் காரணங்களாகக் குறிப்பிடப்படுகின்றன.

RAV/ORP சேவைகளைப் பயன்படுத்துவோர், வேலைதேடல் முயற்சிகளுக்கான ஆதாரங்களை வழங்குதல், ஆலோசனைச் சந்திப்புகளில் பங்கேற்றல் மற்றும் ஒதுக்கப்படும் பயிற்சிகளை மேற்கொள்ளுதல் போன்ற கடமைகளை நிறைவேற்ற வேண்டியிருக்கலாம்.

சுவிஸில் குளிர்கால சுவாச நோய்கள்: காய்ச்சல், COVID-19, RSV குறித்து அறிந்திருக்க வேண்டியவை

முதியவர்கள், குழந்தைகள், நாட்பட்ட நோயாளிகளுக்குக் கூடுதல் கவனம் – நவம்பரில் இரண்டு தடுப்பூசி வாரங்கள்

சுவிட்சர்லாந்தில் குளிர்காலம் நெருங்கும் நிலையில், காய்ச்சல், COVID-19 மற்றும் RSV போன்ற சுவாச நோய்களிலிருந்து பாதுகாப்பைப் பெறுவது அவசியமாகிறது. சாதாரண சளி போன்ற அறிகுறிகளுடன் ஆரம்பிக்கும் இந்த நோய்கள், சிலருக்கு நிமோனியா உள்ளிட்ட கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தலாம் என மத்திய பொதுச் சுகாதார அலுவலகம் தெரிவிக்கிறது.

காய்ச்சல்: தடுப்பூசி பெறுவதற்கான காலம்

சுவிட்சர்லாந்தில் காய்ச்சல் அலை பொதுவாக டிசம்பர் நடுப்பகுதி முதல் மார்ச் நடுப்பகுதி வரையான காலத்தில் எதிர்பார்க்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் அதன் தீவிரம் மாறுபடும்.

65 வயதுக்கு மேற்பட்டவர்கள், கர்ப்பிணிகள், குறிப்பிட்ட நாட்பட்ட நோய்களுடையவர்கள் உள்ளிட்டோருக்கும், ஆபத்துக் குழுவினருடன் நெருங்கிய தொடர்பில் இருப்போருக்கும் காய்ச்சல் தடுப்பூசி பரிந்துரைக்கப்படுகிறது. ஒக்டோபர் நடுப்பகுதியிலிருந்து காய்ச்சல் அலை ஆரம்பிப்பதற்கு முன்னர் தடுப்பூசி பெறுவது பரிந்துரைக்கப்படும் காலமாகும்.

காய்ச்சல் தடுப்பூசி COVID-19 அல்லது ஏனைய சாதாரண சளித் தொற்றுகளிலிருந்து பாதுகாப்பளிக்காது.

விநியோகத் தாமதம் குறித்து அதிகாரிகள் கூறுவது என்ன?

சில காய்ச்சல் தடுப்பூசிகளின் விநியோகத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளதை அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். இருப்பினும், தடுப்பூசி பெற விரும்புவோர் காய்ச்சல் அலை ஆரம்பிப்பதற்கு முன்னர் அதனைப் பெற முடியும் என 2026 ஒக்டோபர் 13ஆம் திகதி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உள்ளூரில் கிடைக்கும் தடுப்பூசி மற்றும் முன்பதிவை மருத்துவர் அல்லது மருந்தகத்திடம் விசாரிக்கலாம்.

COVID-19: சிலருக்குத் தொடரும் கடுமையான பாதிப்பு அபாயம்

COVID-19 பெரும்பாலானவர்களுக்கு மிதமான பாதிப்பை ஏற்படுத்தினாலும், சிலருக்கு மருத்துவமனைச் சிகிச்சை தேவைப்படலாம். தொற்றுக்குப் பின்னர் நீண்டகால உடல்நலப் பிரச்சினைகளும் ஏற்படலாம்.

65 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் குறிப்பிட்ட அடிப்படை நோய்களுடையவர்கள் அதிக ஆபத்தை எதிர்கொள்கின்றனர். ஆபத்துக் குழுவைச் சேர்ந்தவர்கள் சளி போன்ற அறிகுறிகள் ஏற்பட்டால் மருத்துவரை விரைவாகத் தொடர்புகொள்வது, ஆரம்பச் சிகிச்சையைப் பரிசீலிக்க உதவும்.

RSV: குழந்தைகளுக்கும் முதியவர்களுக்கும் கூடுதல் கவனம்

RSV தொற்று பச்சிளங்குழந்தைகளுக்கும் முதியவர்களுக்கும் கடுமையான சுவாசப் பாதிப்பை ஏற்படுத்தலாம். 75 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும், 65 வயதுக்கு மேல் குறிப்பிட்ட அடிப்படை நோய்களுடையவர்களுக்கும் தடுப்பூசி பரிந்துரைக்கப்படுகிறது. மிக அதிக ஆபத்துள்ள சில நோயாளிகளுக்கு 18 வயதிலிருந்தே பரிந்துரை பொருந்தலாம்.

குழந்தைகளுக்கான பாதுகாப்பில் ஒரு முக்கிய வேறுபாடு உள்ளது: பச்சிளங்குழந்தைகளுக்கு நேரடியாக வழக்கமான RSV தடுப்பூசி வழங்கப்படுவதில்லை. கர்ப்பகாலத்தில் தாய்க்குத் தடுப்பூசி வழங்குவதன் மூலமோ, பிறந்த பின்னர் குழந்தைக்கு நோயெதிர்ப்பு எதிரணிகள் வழங்குவதன் மூலமோ பாதுகாப்பு ஏற்படுத்தப்படுகிறது.

தற்போதைய BAG தகவலின்படி, கர்ப்பிணியல்லாத பெரியவர்களுக்கான RSV தடுப்பூசிச் செலவு அடிப்படை மருத்துவக் காப்புறுதியால் ஈடுசெய்யப்படுவதில்லை. தடுப்பூசி பெறுவதற்கு முன்னர் மொத்தக் கட்டணத்தையும் காப்புறுதிக் கொடுப்பனவையும் உறுதிப்படுத்திக்கொள்ளலாம்.

தேசிய தடுப்பூசி வாரங்கள்

2026 நவம்பர் 2-7 மற்றும் நவம்பர் 23-28 ஆகிய நாட்களில் பங்கேற்கும் மருத்துவ நிலையங்களிலும் மருந்தகங்களிலும் தடுப்பூசி ஆலோசனையும் சேவையும் வழங்கப்படுகின்றன. வயது, உடல்நிலை மற்றும் முன்னைய தடுப்பூசிகளுக்கு ஏற்ப தமக்குப் பொருத்தமான பரிந்துரையை அறிந்துகொள்ளலாம்.

AERO COURIER

உங்கள் உறவுகள்...
எங்களால் இணைகிறது...

ஒரு கிலோவிற்கு
7.00 CHF
மட்டுமே!

சுவிட்சர்லாந்திலிருந்து
இலங்கைக்கு விமானம்
ஊடாக குறைந்த
விலையில்
உங்கள் பொதிகளை
10 நாட்களுக்குள்
உங்கள் உறவினர்களின்
கைகளில் கிடைக்கப்பேற
இன்றே நாடுங்கள்!



SATISFACTION 100% GUARANTEE

Neugasse 60, 8005 Zürich
079 591 16 66 | 076 384 15 80
www.aerocourier.com



நவம்பரில் சுவிட்சர்லாந்தில் கவனிக்க வேண்டிய மாற்றங்களும் முக்கிய திகதிகளும்!

1. மருத்துவக் காப்புறுதி மாற்றம் – நவம்பர் 30 கடைசித் திகதி

2027 ஜனவரி முதல் அடிப்படை மருத்துவக் காப்புறுதி நிறுவனத்தை மாற்ற விரும்பினால், ரத்துச் செய்யும் கடிதம் நவம்பர் 30க்குள் தற்போதைய நிறுவனத்தைச் சென்றடைய வேண்டும். தபாலில் அனுப்பிய திகதி மட்டும் போதாது. அதேவேளையில் புதிய நிறுவனத்திலும் பதிவு செய்ய வேண்டும். 2027இல் சராசரிக் கட்டணம் 5 சதவீதம் அதிகரிக்கிறது. அரசின் Priminfo தளத்தில் கட்டணங்களை ஒப்பிடலாம்.

2. நவம்பர் 29 – நான்கு தேசிய வாக்கெடுப்புகள்

AHVக்கு VAT உயர்வு மூலம் மேலதிக நிதியளித்தல், பட்டாசுக் கட்டுப்பாடு, திருமணமான தம்பதிகளின் மத்திய வரிவிதிப்பு மற்றும் போர்த் தளபாடச் சட்டத் திருத்தம் ஆகிய நான்கு விடயங்களில் வாக்காளர்கள் தீர்மானிக்கவுள்ளனர். இவை இன்னும் வாக்காளர்களின் தீர்ப்புக்குக் காத்திருக்கும் முன்மொழிவுகள்.

3. நவம்பர் 2 முதல் புதிய உயிரளவியல் அடையாள அட்டை

சுவிஸ் குடிமக்கள் விருப்பத்தின் அடிப்படையில் புதிய biometric அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கலாம். முகப்படமும் இரண்டு கைரேகைகளும் கொண்ட சிப் இதில் இடம்பெறும். கன்டன் கடவுச்சீட்டு அலுவலகங்கள் மற்றும் வெளிநாட்டிலுள்ள சுவிஸ் பிரதிநிதித்துவ நிலையங்களில் பெறலாம். இது e-ID அல்ல; ஏற்கனவே சுவிஸ் கடவுச்சீட்டு வைத்திருப்பது விண்ணப்பிப்பதற்கான கட்டாய நிபந்தனையும் அல்ல.

4. SWISS துபாய் சேவை மீளாரம்பம் ஒத்திவைப்பு

துபாய்க்கான விமானச் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதை நவம்பர் 25 வரை SWISS ஒத்திவைத்துள்ளது. மத்திய கிழக்கின் நிலையற்ற சூழலே காரணமாகக் கூறப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு மாற்றுப் பதிவு அல்லது முழுப் பணமீளளிப்பு வழங்கப்படும். பயணத்திற்கு முன் விமானத்தின் நிலையைச் சரிபார்க்க வேண்டும்.

5. சூரிச்சில் சில Migros கிளைகளின் நேரம் நீடிப்பு

நவம்பர் 2 முதல் சில Migros கிளைகள் முன்னதாகத் திறக்கப்படுகின்றன அல்லது நீண்ட நேரம் இயங்குகின்றன. உதாரணமாக, Wipkingen கிளை திங்கள் முதல் சனி வரை காலை 7-இரவு 9 மணி வரை இயங்கும். Bahnhof Enge கிளை வாரநாட்களில் காலை 6 மணிக்குத் திறக்கப்படும். உங்கள் கிளையின் நேரத்தைத் தனியாகச் சரிபார்க்கவும்.

6. விமானப் பயணிகள் தரவுச் சட்டம் அமுலுக்கு

விமானப் பயணிகளின் முன்பதிவுத் தரவுகளைப் பயங்கரவாதம் மற்றும் பாரிய குற்றங்களைத் தடுக்கப் பயன்படுத்தும் சட்டம் நவம்பர் 1 முதல் அமுலுக்கு வந்துள்ளது. எனினும்,

Fedpolஇன் பயணிகள் தகவல் பிரிவு 2027 பெப்ரவரி 1 முதலே செயற்படத் தொடங்கும்.

7. நவம்பர் 20 – Airbnb வீட்டு விதிகளில் மாற்றம்

விருந்தினர்களிடம் படுக்கை விரிப்புகளை அகற்றுதல், துணி துவைத்தல் அல்லது குப்பைகளைத் தங்குமிடத்திற்கு வெளியே எடுத்துச் செல்லுதல் போன்ற வேலைகளைக் கோருவதை Airbnb புதிய விதிகள் கட்டுப்படுத்துகின்றன. எனினும், பயன்படுத்திய துண்டுகளை ஒன்றுசேர்த்தல், குறிப்பிட்ட உள்ளகத் தொட்டிகளில் கழிவுகளைப் பிரித்துப் போடுதல் போன்ற நியாயமான கோரிக்கைகள் தொடரலாம். அனைத்து வெளியேறும் நேரப் பணிகளுக்கும் முழுத் தடை விதிக்கப்படவில்லை.

8. UBS மூலதன விதிகள் குறித்து விவாதம் தொடர்கிறது

Credit Suisse நெருக்கடிக்குப் பின்னர் UBSக்கான மூலதனத் தேவைகளை வலுப்படுத்தும் திட்டம் விவாதத்தில் உள்ளது. வங்கி வெளிநாட்டுக்கு இடம்பெயர்ந்தால் ஏற்படக்கூடிய வேலைவாய்ப்பு இழப்புகள் குறித்து ஊழியர் அமைப்பு எச்சரித்துள்ளது. 12,000 வேலைகள் ஏற்கனவே நீக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது எனப் புரிந்துகொள்ளக்கூடாது; அது மிக மோசமான சூழலுக்கான மதிப்பீடு.

9. புதிய மத்திய அமைச்சருக்கான தெரிவு நடவடிக்கைகள்

Guy Parmelin பதவி விலகுவதையடுத்து அவருக்குப் பதிலானவரைத் தெரிவுசெய்யும் நடவடிக்கைகள் தொடர்கின்றன. டிசம்பர் 9ஆம் திகதி இணைந்த மத்திய நாடாளுமன்றத்தில் தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இறுதித் தெரிவை நாடாளுமன்றமே மேற்கொள்ளும்.

10. கிறிஸ்மஸ் சந்தைகள் ஆரம்பம்

சூரிச்சின் Hauptbahnhof, Altstadt, Münsterhof உள்ளிட்ட முக்கிய சந்தைகள் நவம்பர் 19ஆம் திகதி ஆரம்பமாகின்றன. பாசலின் Barfüsserplatz மற்றும் Münsterplatz சந்தைகள் நவம்பர் 26 முதல் டிசம்பர் 23 வரை நடைபெறும். ஒரே நகரிலுள்ள சந்தைகளுக்குக்கூட நேரங்கள் வேறுபடலாம்.

11. இரண்டு தேசிய தடுப்பூசி வாரங்கள்

நவம்பர் 2-7 மற்றும் 23-28 ஆகிய காலப்பகுதிகளில் தேசிய தடுப்பூசி வாரங்கள் நடைபெறுகின்றன. பங்கேற்கும் மருத்துவ நிலையங்கள் மற்றும் மருந்தகங்களில் காய்ச்சல், COVID-19 மற்றும் RSV தொடர்பான ஆலோசனைகளையும் பொருத்தமான தடுப்பூசிகளையும் பெறலாம். அனைவருக்கும் ஒரே தடுப்பூசிப் பரிந்துரை பொருந்தாது.

IMPORTAS Cash & Carry

உலகின் சுவை உங்களுக்கு அருகில்!

ZÜRICH RETAIL SHOP

Importas Cash & Carry
Only 80 m from Letzipark

Baslerstrasse 102
8048 Zürich

Tel: +41 43 343 03 55
Fax: +41 43 343 03 56
Email: info@importas.ch

OPENING HOURS
Mon–Fri 10:00–20:00
Sat 09:00–18:00

BERN RETAIL SHOP

Importas Cash & Carry

Kranichweg 8
3074 Muri bei Bern

Tel: +41 31 951 24 44
Email: bern@importas.ch

OPENING HOURS
Mon–Fri 09:00–19:00
Sat 08:00–18:00

www.importas.ch

MULLTI CONSULTING
Versicherung & Finanz

IHR PARTNER FÜR

IMMOBILIEN
VERSICHERUNG
FINANZ

SICHER. PERSÖNLICH. FÜR IHRE ZUKUNFT.



வீடு வாங்க விற்க

வங்கிக்கடன்

காப்புறுதிகள்

வருமான வரிப்படிவம் நிரப்புதல்

சமூக அக்கறை
எமது இலக்கு!

- உங்கள் வீட்டையும்,
- உங்கள் குடும்பத்தையும்,
- உங்கள் எதிர்காலத்தையும் பாதுகாப்போம்.

079 765 50 57
Jetzt kontaktieren

Im Rietpark 5
8180 Bülach ZH

srasan@hotmail.com
info@multiconsulting.ch

Besuchen Sie unsere Website.
www.multiconsulting.ch

SKY AUTO AG

சுவிற்சர்லாந்தில் உங்களுக்கு பிடித்த வாகனம் எந்த Brandல் எங்கிருந்தாலும் உடனே ஒழுங்கு செய்து உங்கள் கைகளுக்கே கொண்டுவந்து தரும் முதல் தமிழர் நிறுவனம்





Express Credit அல்லது Leasing சேவை

குறைந்த வட்டி வீதம் மற்றும் காப்புறுதியோடு
உங்கள் வாகனம் உங்கள் கைகளில்

தொடர்புக்கு 031 930 70 80 | Libellenweg 21 3006 Bern | www.sky-auto.ch

ELLAALAN
SWITZERLAND

இறக்குமதியாளர், விநியோகஸ்தர், மொத்தவிற்பனையாளர்



Zürich சில்லறை விற்பனை நிலையம்

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்.

Moteren Strasse 9
8005 Zürich

044 543 48 84

மொத்த விற்பனை

Felsweg 1
5727 Oberkulm AG, Switzerland

+41 41 870 88 44

+41 79 888 88 44

info@ellaalan.ch

www.ellaalan.ch

Sj

சிறி ஜுவல்லரி

உங்கள் ரசனைக்கேற்ப புதிய
தங்க நகைகளை வாங்கவும்
புதிய டிசைன்களில் ஆபரணங்களை
செய்து கொள்ளவும், பழைய
தங்கங்களை உருக்கி, புதிய
தங்க நகைகள் செய்து கொள்ளவும்,
விரைவாக திருத்த வேலைகளும்
செய்தும் தரப்படும்.

**நகைத்தொழிலில் நீண்ட
காலம் அனுபவம் பெற்ற
நாங்கள் தாலிக்கு பொன்
உருக்கி வைரதாலிக்கொடி
செய்து தருகிறோம்.**

வைர தாலி கொடி. மோதிரம்,
வளையல், பெயர் பெண்டன்
மற்றும் அனைத்து நகைகளும்
செய்து தரப்படும்.



Sj SRI JEWELLERY

Mattengasse 17, 8005 Zurich
043 366 80 09
info@srijewellery.ch
079 898 51 01


Aathi
RESIDENCIES
Alles Garden, Trincomalee
LUXURY APARTMENTS FOR SALE
Experience a new lifestyle at Alles Garden, Trincomalee's premium residences.
Pay just 30% now
Balance payable monthly with 0% interest
Book Your Site Visit Today
Mr. Srikaran
+41 79 136 4465
+94 77 710 0050


Food is our trade
World is our Market
Sai Trader
since 1991
GmbH
Importeur für frishe, exotische Gemuse | Fruchte & Fische
Aufeldstrasse 9 • 5417 Turgi
Tel. 044 885 86 50 • Fax 044 885 86 61
www.saitrader.ch • info@saitrader.ch
உணவுப்பொருட்களின் இறக்குமதியாளரும், மொத்த விற்பனையாளரும்.


rib

ROMANDA IMMO
BUCHHALTUNG GMBH

உங்கள் கணக்குகள் –
எங்கள் பொறுப்பு!

சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான
நம்பகமான மற்றும் தொழில்முறை
கணக்கியல் சேவைகள்.

- கணக்குப் பதிவு – Buchhaltung
- வருடாந்த கணக்கு முடிப்பு – Jahresabschluss
- MWST / VAT கணக்கீடு
- சம்பள கணக்கீடு – Lohnbuchhaltung
- Quellensteuer
- நிறுவன ஆரம்பம் மற்றும் நிர்வாக ஆலோசனை
- வணிகம் மற்றும் நிதி தொடர்பான ஆலோசனைகள்



துல்லியம்
•
நம்பிக்கை
•
தனிப்பட்ட சேவை

உங்கள் வியாபார வெற்றிப் பயணத்தில்
நம்பிக்கையான துணையாக...

ROMANDA IMMO
BUCHHALTUNG GMBH

Tivolistrasse 1
6006 Luzern
079 486 59 04
info@ribgmbh.ch
www.ribgmbh.ch

STRAVEL
Your Journey Our Care

Year End
Sale
இலங்கைக்கு..

620 CHF
40 Kilo

அழையுங்கள்
044 419 91 00 | 079 913 77 59

Luisenstrasse 41, 8005 Zurich | www.stravel.ch | info@stravel.ch

செயின்ட் காலனில் இரண்டு புதிய வேகக் கண்காணிப்புக் கருவிகள்:

அபராத வருமானத் திட்டத்திற்குக் கண்டனம்!



செயின்ட் காலன் நகரில் 2028ஆம் ஆண்டு இரண்டு புதிய இடம்மாற்றக்கூடிய வேகக் கண்காணிப்புக் கருவிகளை பயன்பாட்டுக்குக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் 700,000 பிராங்குகள் மேலதிக அபராத வருமானம் எதிர்பார்க்கப்படுவதாக Nau.ch செய்தி தெரிவிக்கிறது.

நகரின் 'Alliance' நிதிச் சீரமைப்புத் திட்டத்தில் இடம்பெற்றுள்ள இந்த இரு கருவிகளையும் கொள்வனவு செய்ய 400,000 பிராங்குகள் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. சில வீதிகளில் வேக வரம்புகள் போதியளவு கடைப்பிடிக்கப்படுவதில்லை என்பதும், ஏனைய நகரங்களுடன் ஒப்பிடும்போது கண்காணிப்புக் கருவிகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதும் திட்டத்திற்கு ஆதரவான காரணங்களாக முன்வைக்கப்பட்டுள்ளன.

எனினும், வேகக் கண்காணிப்பு வீதிப் பாதுகாப்புக்காகவே இருக்க வேண்டும்; நகரின் நிதிப் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்காக அல்ல என Jungfreisinnige விமர்சித்துள்ளது. நிதி நோக்கில் கண்காணிப்பை அதிகரிப்பது பொதுமக்களின் ஏற்றுக்கொள்ளுதலைப் பாதிக்கலாம் என GLP தரப்பும் எச்சரித்துள்ளது

லூசேர்ன் நகரில் 2027 முதல் மணித்தியாலக் குறைந்தபட்ச ஊதியம் 23 பிராங்க்

லூசேர்ன் நகரில் பொருந்தும் குறைந்தபட்ச ஊதியம், 2027 ஜனவரி 1 முதல் மணித்தியாலத்திற்கு 23 பிராங்காக உயர்கிறது. ஊதிய விதி பின்பற்றப்படுகிறதா என்பதைக் கண்காணிக்கும் அமைப்புகளும் உருவாக்கப்படுகின்றன. தொழிலாளர், முதலாளி மற்றும் நகர நிர்வாகப் பிரதிநிதிகள் அடங்கிய ஆணைக்குழு,

எந்தத் துறைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும். இந்தச் செய்தி முழு லூசேர்ன் கன்டனுக்குமான பொதுவான குறைந்தபட்ச ஊதிய அறிவிப்பல்ல; நகர எல்லைக்குள் பணியாற்றுவோருக்கு முக்கியமானது

SPITEX
UNICARE AG



உறவினரைப் பராமரிப்பவராக

(பராமரிப்பு உதவியாளராக)

பணியில் சேருங்கள்

உங்கள் அன்பானவர்களை
பராமரித்து, அதற்கான
நியாயமான ஊதியம் பெறுங்கள்!

மணிக்கு
CHF 38.- | ஊதியம்

நாங்கள் செயல்படும்
11 மாகாணங்கள்:



- Aargau
- Zürich
- Schaffhausen
- St. Gallen
- Uri
- Basel-Landschaft
- Obwalden
- Bern
- Nidwalden
- Luzern
- Schwyz

உங்கள் வீட்டிலேயே பராமரிப்பு

நியாயமான ஊதியம்

தனிப்பட்ட ஆதரவு

இப்போது தொடர்புகொள்ளுங்கள்
076 581 44 45

மேலும் தகவல்களுக்கு
spitexunicare.ch

MENSCHLICH • ZUVERLÄSSIG • IN IHRER REGION

நோய்விடுப்பின் முதல் நாளிலேயே மருத்துவச் சான்றிதழ்:

மருத்துவர்கள் அதிருப்தி!



நோய்விடுப்பு எடுக்கும் ஊழியர்களிடம் முதல் நாளிலேயே மருத்துவச் சான்றிதழ் கோரும் நிறுவனங்கள் அதிகரிப்பதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. குறுகிய கால உடல்நலக் குறைவுகளுக்கும் மருத்துவ ஆலோசனை பெற வேண்டிய நிலை ஏற்படுவதால், இது மருத்துவ நிலையங்களின் பணிச்சுமையை அதிகரிப்பதாக மருத்துவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

சில நாட்களில் குணமடைந்து வேலைக்குத் திரும்பக்கூடியவர்கள்கூட, சான்றிதழுக்காக உடனடியாக மருத்துவரை அணுக வேண்டியுள்ளது. நிறுவனங்கள் மட்டுமன்றி பாடசாலைகள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் சுற்றுலா ஏற்பாட்டாளர்களும் மருத்துவ ரீதியாக அவசியமற்ற சந்தர்ப்பங்களில் சான்றிதழ்களைக் கோருவதாக, குடும்ப மற்றும் சிறுவர் மருத்துவர்கள் சங்கத்தின் இணைத் தலைவர் Monika Reber சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்டம் என்ன சொல்கிறது?

SECO விளக்கத்தின்படி, தனியார் வேலைவாய்ப்புகளில் முதலாளி பொதுவாக வேலை செய்ய முடியாத முதல் நாளிலிருந்தே மருத்துவச் சான்றிதழ் கோரலாம். பல வேலை ஒப்பந்தங்களில் மூன்றாவது அல்லது நான்காவது நாளிலிருந்தே சான்றிதழ் தேவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, “முதல் மூன்று நாட்களுக்கும் சான்றிதழ் தேவையில்லை” என்பது அனைவருக்கும் பொருந்தும் சட்டவிதியல்ல. SECO





TAMINAA

AYURVEDIC WELLNESS

Natürliche Schmerzlinderung ohne Medikamente gegen Stress,

Rückenschmerzen, Nackenschmerzen, Schlafprobleme

DISCOUNT 25% OFF



BEST PRICE TREATMENT

Krankenkasse anerkannt!













- Entspannung
- Migränelindernde
- Stressabbau
- Nacken/Rückenschmerzen
- Schlafqualität

Rückenschmerzen/ Nackenschmerzen

Stress

Migräne/ Kopfschmerzen

Buchen Sie jetzt und erhalten Sie **25 % Rabatt** für November!

Nur für Sie!

Buchen Sie noch heute Ihren Termin!

+41 79 940 15 10

taminaa.ch

Hegibachstrasse 34B
8032 Zürich
Schweiz

Krankenkasse anerkannt!

WIR KOMMEN AUCH ZU IHNEN NACH HAUSE, INS BÜRO ODER INS HOTEL

ZUHAUSE
Hausbesuch

BÜRO
Firmenbesuch

HOTEL
Hotelbesuch

+41 79 940 15 10 | taminaa.ch | Hegibachstrasse 34B 8032 Zürich Schweiz

TAMINAA – Ihre Gesundheit in besten Händen

சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

பத்திரிகை

வேதாந்தி : 004178 6264375

supeedsam@gmail.com

வாரத்தில்ஒருமுறை
உங்கள் கரங்களில்
மின்னிதழாக...

சுபீட்சம் வாட்ஸ் ஆப் குழுவில்
இணைய இங்கே தொடவும்....

CLICK HERE

Aesch இல் 17 பொலிஸ் நாய்களுக்குத் திறன் பரீட்சை: பொதுமக்களுக்கும் அழைப்பு!



விளக்கப்படம்

பாசல் லாண்ட்ஷாஃப்ட் பொலிஸாரின் வருடாந்த பொலிஸ் நாய்கள் திறன் பரீட்சை, நவம்பர் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.30 மணி முதல், Aesch பகுதியிலுள்ள Mehrzweckhalle Löhrenacker பல்நோக்கு மண்டப வளாகத்தில் நடைபெறவுள்ளது.

பாசல் ஸ்டாட் கன்டன் பொலிஸாருடன் இணைந்து 14ஆவது முறையாக நடத்தப்படும் இந்தப் பரீட்சையில், 17 நாய் வழிநடத்துநர்கள் தமது நாய்களுடன் பங்கேற்கவுள்ளனர். அரசியல், நீதித்துறை, வர்த்தகம் மற்றும் சமூகத் துறைகளைச் சேர்ந்த விருந்தினர்களும் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

நிகழ்வைப் பார்வையிட ஆர்வமுள்ள அனைவருக்கும் பொலிஸார் அழைப்பு விடுத்துள்ளனர். மதிய உணவுக்குப் பின்னர் பெறுபேறுகளும் தரவரிசையும் அறிவிக்கப்படும்.

துருவச் சுழல் பலவீனம்: சுவிஸில் கடுங்குளிர் வருமா?

வடதுருவத்திற்கு மேலுள்ள வளிம ண்டலத்தில் காணப்படும் துருவச் சுழல் வழக்கத்தைவிட முன்னதாகப் பலவீன மடையக்கூடும் என வானிலை மாதிரிகள் காட்டுவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இது ஐரோப்பாவின் நவம்பர் வானிலையில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடும்.

எனினும், சுவிட்சர்லாந்தில் நவம்பர் 4ஆம் திகதி கடுங்குளிரோ தாழ்நிலப் பகுதிகளில் பனிப்பொழிவோ ஏற்படும் என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. காற்றழுத்த அமைப்புகள் நிலைகொள்ளும் இடங்களைப் பொறுத்து, குளிர்ந்த துருவக் காற்று அல்லது மிதமான காலநிலை ஆகிய இரண்டுமே சாத்தியமாகலாம்.

தகவல் கணனி தொழில்நுட்ப நிலையம்

உங்கள் எதிர்காலத்திற்கு ஒரு புதிய துவக்கம்!

புதிய கணனி வகுப்புகள் ஆரம்பம்



எமது நிறுவனத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு விசேட சலுகைகள், ஊக்குவிப்புகள் எம்மால் வழங்கப்படுகின்றன.

அறிவு உங்கள் வெற்றியின் அடித்தளம்!

கணனி வகுப்புகள்

ECDL • SIZ • Windows 11

Word • Excel • PowerPoint • Access



NEW CLASS – ECDL

சனி 09:30 – 11:00

ஞாயிறு 09:30 – 11:00

NEW CLASS – A+

புதன் 18:00 – 20:00



Schnuppern • Zukunftstag • Lehrstellen • Praktikum

இன்றே பதிவு செய்யுங்கள்!

Seebahnstrasse 231, 8004 Zürich

Mano

043 811 80 90

LAMELLE GLASS & STORE SA
VITRERIE - MIROITERIE - STORES

சுவிஸின் ஒரே தமிழ்
கண்ணாடித் தொழிற்சாலை!

சுவிட்சர்லாந்து முழுவதும் சேவை
எந்த இடத்திலும், எந்த நேரத்திலும்!
உங்கள் வீட்டின் அழகையும்
பாதுகாப்பையும் அதிகரிக்க,
உயர்தர கண்ணாடிகளை நாமே
தயாரித்து நேரடியாகப்
பொருத்தித் தருகிறோம்.

BEST PRICE

எமது சேவைகள்:
- ஜன்னல் மற்றும் கதவு கண்ணாடிகள்
- குளியலறை கண்ணாடித் தடுப்புகள் (SHOWER GLASS)
- பால்கனி மற்றும் பாதுகாப்பு வேலி கண்ணாடிகள்
- சமையலறை அலங்காரக் கண்ணாடிகள்

உங்கள் தேவைகளை தமிழில் பேசி, தரமாகப் பெற்றிடுங்கள்!

சிறப்பம்சங்கள்:
- இலவச மதிப்பீடு (GRATIS OFFERTE) — உங்கள் இடத்திற்கே வந்து அளவீடு செய்வோம்.
- சொந்தத் தயாரிப்பு — மிகக் குறைந்த விலை, சிறந்த தரம்.
- நாடெங்கும் சேவை — ஜெனிவா உட்பட சுவிஸின் அனைத்துப் பகுதிகளுக்கும்.

VERNIER
48, Chemin Delay, 1214 Vernier
info@lamelle-glass.ch

GENÈVE
27, Rue du Grand-pré, 1202 Genève
info@lamelle-glass.ch

NYON
8, Rue de la Colombière, 1260 Nyon
nyon@lamelle-glass.ch

இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்:
PRABA +41 79 416 76 96 www.lamelle-glass.ch

7/24 DEPANNAGE URGENCE
022 782 08 88

LAMELLE GLASS & STORE SA
VITRERIE - MIROITERIE - STORES

info@lamelle-glass.ch
www.lamelle-glass.ch - 48, Chemin Delay - 1214 Vernier

NOLIMIT ONE
GmbH

ZUVERLÄSSIG. SAUBER. PÜNKTLICH.
IHR PARTNER FÜR JEDE AUFGABE.

REINIGUNG.
TRANSPORT.
UMZUGSHILFE.

ALLES AUS EINER HAND –
FÜR PRIVAT UND GEWERBE.



REINIGUNG
Sauberkeit, auf die Sie sich verlassen können.



TRANSPORT
Sicher, schnell und zuverlässig ans Ziel.



UMZUGSHILFE
Wir unterstützen Sie beim Umzug – stressfrei und effizient.

ZUVERLÄSSIG
Termingerecht und vertrauensvoll

ERFAHRENES TEAM
5–10 motivierte Mitarbeitende

FLEXIBEL
Kurzfristig einsatzbereit

FAIRE PREISE
Top Qualität zu fairen Konditionen

WARUM NOLIMIT ONE?

- Professionelle Arbeit & höchste Qualität
- Moderne Ausrüstung & 2 Nutzfahrzeuge
- Privatkunden, Firmen & Verwaltungen
- Individuelle Lösungen für Ihren Bedarf
- Termingerecht & zuverlässig



JETZT ANFRAGEN
Wir sind für Sie da!
Kostenlose Beratung.

078 222 2126
nolimitone26@gmail.com

Ostschweiz
Unterwegs für Sie in der Region

Jeder Auftrag
wird mit Sorgfalt und Respekt ausgeführt

Nachhaltig
Umweltbewusst handeln für eine saubere Zukunft

No Limit One – wir machen den Unterschied.

www.nolimitone.ch

தமிழின் குரலாய்
அக்கினி fm
Akkini
CLICK HERE


Danalakshmi
GROSSISTE DES GOÛTS DU MONDE
தனலடசுமி
உலக உணவுப் பொருட்களின் மொத்த விற்பனையாளர்
உங்கள் வணிகத்திற்குத் தேவையான
உணவுப் பொருட்கள் ஒரே இடத்தில்!
மளிகைக் கடைகள் • உணவகங்கள் • உணவு வழங்குநர்கள்
JASMINE RICE
AAAAA
20kg
AKASH BASMATI
Tilda
PURE BASMATI
அரிசி வகைகள்
PG Tips
Nestlé NIDO
CURRY POWDER
Sehani
Jaggery Cubes
தேநீர் • பால்மா • கறித்தூள்
Bingoil
24.0.33L
ZERO SUGAR
Red Bull
Viva
6x1L
சமையல் எண்ணெய் • பால் • பானங்கள்
உங்கள் மொத்த விற்பனைத் தேவைகளை எங்களிடம் தெரிவியுங்கள்!
01 84 74 96 80
danalakshmi.fr
15 Impasse Bloch Prager
93120 La Courneuve, திரைப்படம்
மொத்த விற்பனை மட்டும்

உளவியல் சிகிச்சைச் செலவுகள் உயர்வு:

அதிகரிப்பின் வேகம் குறைந்தது!



அடிப்படை மருத்துவக் காப்புறுதி மூலம் செலுத்தப்படும் உளவியல் உளச்சிகிச்சைச் செலவுகளின் அதிகரிப்பு வேகம் குறைந்துள்ளதாக, மத்திய அரசின் சார்பில் தயாரிக்கப்பட்ட புதிய கண்காணிப்பு அறிக்கை தெரிவிக்கிறது.

2025ஆம் ஆண்டு இச்சிகிச்சைகளுக்கான செலவு சுமார் 991 மில்லியன் பிராங்குகளாக இருந்தது. நடைமுறை மாற்றத்திற்கு முந்தைய முழு ஆண்டான 2021இல் இது 528 மில்லியன் பிராங்குகளாக இருந்தது.

2023இல் வருடாந்தச் செலவு அதிகரிப்பு 36.4 சதவீதமாக பதிவான நிலையில், 2025இல் அது 7.7 சதவீதமாகக் குறைந்துள்ளது. காப்புறுதி பெற்ற நபர் ஒருவருக்கான சராசரிச் செலவு, ஒப்பீட்டுக் காலத்தில் 60 பிராங்குகளிலிருந்து 106 பிராங்குகளாக உயர்ந்துள்ளது.

2022ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து, மருத்துவப் பரிந்துரையின் அடிப்படையில் உளவியல் உளச்சிகிச்சையாளர்கள் சுயாதீனமாகச் சேவை வழங்கி, அடிப்படை மருத்துவக் காப்புறுதிக்குக் கட்டணக் கணக்கைச் சமர்ப்பிக்க முடிகிறது. சிகிச்சையை நாடுவோர் அதிகரித்தமை மற்றும் சேவையை அணுகும் வாய்ப்பு மேம்பட்டமை உள்ளிட்ட காரணிகள், செலவு உயர்வின் 63.6 சதவீதத்தை விளக்குவதாக BAG தெரிவித்துள்ளது.

VTS Finance GmbH

மருத்துவக் காப்பீடு 2027

காப்பீட்டுக் கட்டணங்களை ஒப்பிடுங்கள்!

சேமிப்புக்கான வாய்ப்பை அறியுங்கள்!



முக்கிய நாள்: 30 நவம்பர் 2026

உங்கள் மருத்துவக் காப்பீட்டை மாற்ற விரும்புகிறீர்களா?

உங்களுக்குப் பொருத்தமான காப்பீட்டைத் தேர்ந்தெடுக்க ***V.T.S. Finance GmbH*** உதவுகிறது.

- காப்பீட்டுக் கட்டணங்களை ஒப்பிடுதல்
- பொருத்தமான காப்பீட்டுத் திட்டத்தைத் தேர்வு செய்தல் (Hausarzt, HMO, Telmed)
- மேலதிக காப்பீடுகள் குறித்து ஆலோசனை (வெளிநோயாளர், மருத்துவமனை, மாற்று மருத்துவம், வெளிநாடு)
- தனிப்பட்ட ஆலோசனை — கட்டாயப் பொறுப்பின்றி
- காப்பீட்டு நிறுவனத்தை மாற்ற உதவி

கடைசி நேரம் வரை காத்திருக்க வேண்டாம்!

அடிப்படைக் காப்பீட்டை நிறுத்தும் கடிதம், பொதுவாக **30 நவம்பர் 2026க்குள்** தற்போதைய காப்பீட்டு நிறுவனத்திற்குக் கிடைக்க வேண்டும்.

V.T.S. Finance GmbH
Gartenstadtstrasse 5
3098 Köniz

தொலைபேசி / WhatsApp
078 920 58 58
info@vtsfinance.ch

ஆலோசனைக்கு இன்றே தொடர்புகொள்ளுங்கள்!

உங்கள் ஆரோக்கியம். உங்கள் பாதுகாப்பு. எங்கள் ஆலோசனை.

VTS Finance GmbH

Beste Gelegenheit

உங்கள் கனவு இல்லம் மவுண்ட் லவினியாவில்!



No.20, Beach Road, Mt. Lavinia, Sri Lanka

அன்புடைய வாடிக்கையாளர்களே

மவுண்ட் லவினியாவின் சிறந்த இடத்தில் உங்கள் கனவு வீட்டை வாங்குங்கள்.

20% முன்பணம் | மீதித் தொகை **24** தவணைகளில்

Unit Type	Type A	Type B	Type C	Type D	Type E	Type F
Area	1075 sqft	900 sqft	880 sqft	1075 sqft	975 sqft	1780 sqft
First Floor	Rs.40.85 m	Rs.34.20 m	Rs.33.44 m	Rs.40.85 m	Rs.37.05 m	
Second Floor	Rs.40.85 m	Rs.34.20 m	Rs.33.44 m	Sold	Rs.37.05 m	
Third Floor	Rs.40.85 m	Rs.34.20 m	Rs.33.44 m	Sold	Rs.37.05 m	
Fourth Floor	Rs.40.85 m			Sold	Sold	Rs.67.64 m
Fifth Floor	Sold			Sold	Sold	Sold
Sixth Floor	Rs.40.85 m			Rs.40.85 m	Rs.37.05 m	Rs.67.64 m

மேலும் தகவல்களுக்கு எம்மைத் தொடர்புகொள்ளுங்கள்

078 920 58 58 | info@vtsfinance.ch

Langstrasse வன்முறை: இருவர் கைது —

தீவைப்புகளுக்கு அனைத்துத் தரப்பிலும் கண்டனம்

பொலிஸ் செலவு வசூலிப்பு விதி நீதிமன்றத்தில் முடக்கம்; சொத்துச் சேத இழப்பீட்டுக்கான சட்டப்பொறுப்பு தனியானது



Zürich நகரின் Langstrasse மற்றும் Helvetiaplatz சுற்றுவட்டாரத்தில் ஹாலோவீன் இரவு இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து, இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். தீவைப்புகள், சொத்துச் சேதங்கள் மற்றும் பாதுகாப்புப் படையினர் மீதான தாக்குதல்களுக்கு நகரின் அரசியல் கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

அன்று இரவு நடந்தது என்ன?

ஒக்டோபர் 31ஆம் திகதி இரவு சுமார் 10.30 மணிக்கு, Kreis 4 பகுதியிலுள்ள Piazza Cellaவில் பல நூற்றுக்கணக்கானோர் திரண்டதாக நகரப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவர்களில் சிலர் முகங்களை மறைத்திருந்ததுடன், சிலர் ஹாலோவீன் வேடமணிந்திருந்தனர்.

இரவு 11 மணியளவில் கூட்டம் Helvetiaplatz நோக்கி நகர்ந்தது. குப்பைக் கொள்கலன்கள் வீதிக்குக் கொண்டுவரப்பட்டுத் தீவைக்கப்பட்டன. பின்னர் சிறு குழுக்களாகப் பிரிந்தவர்கள் பல இடங்களில் மின்சாரச் சைக்கிள்கள், மின்சார ஸ்கூட்டர்கள் மற்றும் Zwinglistrasse பகுதியில் ஒரு காருக்குத் தீவைத்ததாகப் பொலிஸார் கூறுகின்றனர்.

Stauffacher பொதுப் போக்குவரத்து நிறுத்தத்தினதும் அருகிலுள்ள கடைகளினதும் கண்ணாடிகள் சேதப்படுத்தப்பட்டன. பாதுகாப்புப் படையினர் மீது பட்டாசுகள், கற்கள் மற்றும் போத்தல்கள் வீசப்பட்டன. பொலிஸார் நீர்த்தாரை, கண்ணீர்ப்பு கை மற்றும் ரப்பர் குண்டுகளைப் பயன்படுத்தினர். அதிகாலை சுமார் 1.30 மணிக்கு நிலைமை



அமைதியடைந்தது. சேதத்தின் பெறுமதி இன்னும் மதிப்பிடப்படவில்லை.

19, 21 வயதுடைய இருவர் கைது

கட்டுமானப் பகுதியொன்றில், பொலிஸார் மீது எறிவதற்காகப் பொருட்களைச் சேகரித்திருக்கலாம் என்ற சந்தேகத்தில், சுவிஸ் குடியுரிமையுடைய 19 மற்றும் 21 வயது இளைஞர்களைக் கன்டோன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவர்களிடம் முகமறைப்புப் பொருட்களும் ஆயுதங்களும் இருந்ததாக அதிகாரப்பூர்வ அறிக்கை தெரிவிக்கிறது. மேலும், 18 இடவிலகல் உத்தரவுகள் பிறப்பிக்க ப்பட்டுள்ளன.

கட்சிகளின் கண்டனம்

SP மற்றும் பசுமைக் கட்சியினர் வன்முறையையும் அர்த்தமற்ற அழிவுச் செயல்களையும் கண்டித்துள்ளனர். FDP இதனை குற்றச்செயல் சார்ந்த சுயவிளம்பர நடவடிக்கையாக விமர்சித்துள்ளது.

முன்னெச்சரிக்கை அறிகுறிகள் இருந்தும் வன்முறை ஏன் தடுக்கப்படவில்லை என SVP கேள்வி எழுப்பியுள்ளது. நகரப் பாதுகாப்புப் பொறுப்பாளர் Karin Rykart, நகராட்சி வன்முறையைக் கண்டிப்பதாகவும், நகரப் பொலிஸாருக்குக் கூடுதல் பணியாளர்களைத் தொடர்ந்து கோரி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

செலவை யார் செலுத்துவது?

விதிவிலக்கான பொலிஸ் நடவடிக்கைக்கான செலவை, வேண்டுமென்றே அதற்குக் காரணமானவர்களிடம் கட்டாயமாக வசூலிக்கும் புதிய விதி 2026 ஜனவரி 1ஆம் திகதி நடைமுறைக்கு வந்தது.

எனினும், அதற்கு எதிரான முறைப்பாட்டிற்கு மத்திய உச்ச நீதிமன்றம் இடைநிறுத்தும் விளைவை வழங்கியுள்ளதால், புதிய செலவு வசூலிப்பு ஏற்பாட்டின் அமலாக்கம் முடங்கியுள்ளதாக Keystone-SDA செய்தி தெரிவிக்கிறது.



சமத்துவ நடவடிக்கைகளை விரைவுபடுத்துங்கள்:

சுவிஸ் பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தல்!

குடும்பக் கொள்கை, பெண்களுக்கு எதிரான வன்முறைத் தடுப்பு மற்றும் பொருளாதாரச் சமத்துவம் ஆகிய துறைகளில் சுவிட்சர்லாந்து மேலும் முன்னேற வேண்டியுள்ளதாக மூன்று தேசிய சபை உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

Simone de Montmollin (FDP/GE), Kathrin Bertschy (GLP/BE), Tamara Funiciello (SP/BE) ஆகியோர், அடுத்த மத்திய நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு பெண்களின் அரசியல் பங்களிப்புக் குறித்துத் தமது கருத்துகளை வெளியிட்டுள்ளனர்.

நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கும்போது, அவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகள் அதிகமாக விவாதிக்கப்படுவதுடன் தீர்வுகளுக்கான ஆதரவும் அதிகரிக்கும் என Alliance F அமைப்பின் இணைத் தலைவர் Bertschy தெரிவித்துள்ளார்.

வேலையையும் குடும்பப் பொறுப்புகளையும் இணைத்துச் செல்லும் வசதிகள், குடும்ப வன்முறையிலிருந்து பாதுகாப்பு, மருத்துவத் துறையில் பாகுபாட்டை நீக்குதல் ஆகியவற்றை முன்னுரிமைகளாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வீட்டுவேலை, குழந்தைப் பராமரிப்பு மற்றும் முதியோர் பராமரிப்பு போன்ற ஊதியமற்ற பொறுப்புகள் பெண்களின் வருமான வாய்ப்புகளைக் குறைப்பதாக Funiciello சுட்டிக்காட்டியுள்ளார். பெண்களின் பொருளாதாரச் சுயாதீனத்தை வலுப்படுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கட்சிகளுக்கிடையிலான கருத்து வேறுபாடுகள் தொடர்ந்தாலும், பொதுவான அனுபவங்களின் அடிப்படையில் இணைந்து செயற்படுவது முன்னேற்றத்திற்கு உதவுவதாக மூவரும் தெரிவித்துள்ளனர்.

SUPEEDSAM e-Paper

சூரிச் | ZÜRICH

ஹாலோவீன் இரவில் மூன்று திருட்டுச் சம்பவங்கள்!

மூவர் கைது!

பொதுமக்கள் தடுத்து வைத்தனர்

www.Supeedsam.com



விளக்கப்படம்

சூரிச்சில் ஹாலோவீன் இரவில் மூன்று திருட்டுச் சம்பவங்கள்:

பொதுமக்கள் தடுத்து வைத்த மூவர் கைது!

சூரிச் நகரில் ஹாலோவீன் இரவில் இடம்பெற்ற வீடு புகுந்து திருடுதல், கைப்பை பறித்தல் மற்றும் காருக்குள் புகுந்து திருட முயன்றமை தொடர்பாக மூவரை நகரப் பொலிஸார் கைது செய்துள்ளனர். மூன்று சம்பவங்களிலும் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகள் சந்தேகநபர்களைத் தடுத்து வைத்திருந்தனர்.

Kreis 6, Germaniastrasse பகுதியில் சனிக்கிழமை இரவு தனது வீட்டிற்குள் மூவர் பொருட்களைத் திரட்டிக்கொண்டிருந்ததை குடியிருப்பாளர் ஒருவர் கண்டுள்ளார். அவர்கள் தப்பியோடியபோது, அவர்களில் 17 வயதுடைய ஒருவரை அவர் தடுத்து வைத்தார். மற்ற இருவரும் தப்பினர்.

Kreis 1, Falkenstrasse பகுதியில் சைக்கிளில் வந்த ஒருவர் பெண்ணின் கைப்பையைப் பறித்துச் சென்றுள்ளார். அவரைத் தடுக்க முயன்ற பெண்ணின் துணைவர் கீழே தள்ளப்பட்டதில் சிறு காயமடைந்தார். பின்னர் வழிப்போக்கர்கள் 34 வயதுச் சந்தேகநபரை தடுத்து வைத்தனர்.

ஞாயிறு அதிகாலை Kreis 8, Feldegg-strasse பகுதியில், தனது காருக்குள் புகுந்து பொருட்களைத் தேடிக்கொண்டிருந்த 35 வயது நபரை வாகன உரிமையாளர் தடுத்து வைத்தார். மூவரும் மேலதிக விசாரணைகளுக்காகப் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்


THIS IS TAMIL
தமிழர் பெருமையை அணியுங்கள்!
வரலாறு • பண்பாடு • அடையாளம்
கீழடி | சங்கம் | அரிக்கமேடு | யாழ்ப்பாணம்
தமிழர் கதைகளைச் சொல்லும்
T-Shirts & Hoodies
AVVAIYAR
WORDS OUTLIVE EMPIRES
AMMA
OUR FIRST HOME.
JAFFNA
KNOWLEDGE. MEMORY. IDENTITY.
இலங்கையில் நம்மவர்களின்
வாழ்வாதாரத்தை வலுப்படுத்தி,
வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் ஓர் முயற்சி.
thisistamil.co
thisistamil.co/en/collections/tamil-history
உலகளாவிய விநியோகம்
தொகுப்பைப் பார்வையிடுங்கள் ›

இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்



இளையதம்பி சிறிதாஸ்

தலைவர் — STEDO

கவிஸ் தமிழ் பொருளாதார மேம்பாட்டு நிறுவனம்

03 நவம்பர்

உழைப்பால் உயர்ந்த தொழிலதிபரே,
உள்ளத்தால் உயர்ந்த பண்பாளரே!
'இல்லை' எனச் சொல்லாத இதயமே,
எளியோரைக் காக்கும் கரங்களே!

மட்டக்களப்பில் ஒர் இல்லம் எழுப்பி,
ஒரு குடும்பத்தின் கனவை நனவாக்கினீர்;
கவிஸ் தமிழரின் முன்னேற்றப் பாதையில்,
தலைமை தாங்கி நம்பிக்கை விதைக்கின்றீர்!

நலமும் வளமும் என்றும் பெருக,
நல்லறம் தொடரும் ஆண்டுகள் மலர்க;
அன்பும் மகிழ்வும் வாழ்வில் நிறைய,
பல்லாண்டு வாழ்க! பல்லாண்டு வாழ்க!

அன்புடன் வாழ்த்தும்

சுபீட்சம் குழுமம்

Swiss Supeedsam
Every Think For People
www.Supeedsam.com

03.11.2026



13ஆவது AHV ஓய்வூதியம்: VAT உயர்வுக்குப் பதில் அரச செலவுகளைக் குறைக்க FDP கோரிக்கை!

13ஆவது AHV ஓய்வூதியத்திற்கு நிதியளிக்க பெறுமதிசேர் வரியை (VAT) 0.4 சதவீதப் புள்ளிகளால் உயர்த்தும் திட்டத்தை FDP இணைத் தலைவர் Susanne Vincenz-Stauffacher எதிர்த்துள்ளார். மக்களுக்கு மேலதிகச் சுமையை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, மத்திய அரசின் ஏனைய செலவுகளைக் குறைத்து நிதியை ஒதுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

நவம்பர் 29ஆம் திகதி வாக்கெடுப்புக்கு வரும் இந்த வரி உயர்வுக்கு மத்திய அமைச்சரவையும் நாடாளுமன்றமும் ஆதரவு பரிந்துரைத்துள்ளன. மருத்துவக் காப்புறுதி, வாடகை மற்றும் எரிசக்திச் செலவுகளால் குடும்பங்கள் ஏற்கனவே அழுத்தத்தில் இருப்பதாக FDP தரப்பு கூறுகிறது.

சுற்றுலா ஊக்குவிப்பு, பிராந்திய அபிவிருத்தி உள்ளிட்ட துறைகளில் சேமிப்பை மேற்கொள்ளலாம் என Vincenz-Stauffacher தெரிவித்துள்ளார். எனினும், AHVக்குத் தேவையான நான்கு முதல் ஐந்து பில்லியன் பிராங்குகளை எங்கிருந்து முழுமையாகச் சேமிப்பது என்ற விரிவான திட்டத்தை அவர் முன்வைக்கவில்லை.

அனைவருக்கும் ஓய்வுபெறும் வயதை 67ஆக உயர்த்துவதற்கு பெரும்பான்மை ஆதரவு கிடைக்காது எனவும் அவர் கூறியுள்ளார். அதற்குப் பதிலாக, ஒருவர் வேலை செய்ய ஆரம்பித்த வயது மற்றும் தொழிலின் தன்மைக்கு ஏற்ப நெகிழ்வான ஓய்வு முறையை ஆதரிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

சூரிச் விமான நிலையத்தில் Swissport ஊழியர்கள் வேலைநிறுத்த எச்சரிக்கை!



சூரிச் விமான நிலையத்தில் பணியாற்றும் சுமார் 2,000 Swissport ஊழியர்களுக்கான புதிய கூட்டுத் தொழில் ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்துள்ளதாக தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன. சம்பளம் மற்றும் பணிநிலைமைகளில் முன்னேற்றம் ஏற்படாவிட்டால் வேலைநிறுத்தம் இடம்பெறக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய GAV கூட்டுத் தொழில் ஒப்பந்தங்கள் 2026 டிசம்பர் இறுதியில் காலாவதியாகின்றன. புதிய உடன்பாடு எட்டப்படாவிட்டால், 2027 ஜனவரியில் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம் என வழங்கப்பட்ட செய்தி தெரிவிக்கிறது.

நான்கு ஆண்டுகளில் 7 சதவீதச் சம்பள உயர்வை தொழிற்சங்கங்கள் கோரியுள்ளன. நிறுவனமோ சூரிச்சிலுள்ள சுமார் 75 சதவீத ஊழியர்களுக்கு 2.8 சதவீத உயர்வை முன்வைத்துள்ளதாகக் கூறப்படுகிறது. ஒழுங்கற்ற வேலை நேரங்கள், வார இறுதிப் பணிகள் மற்றும் சில சந்தர்ப்பங்களில் எட்டு மணிநேரம் மட்டுமே கிடைக்கும் ஓய்வு இடைவெளி குறித்தும் தொழிற்சங்கங்கள் அதிருப்தி தெரிவித்துள்ளன.

பயணிகள் பதிவு, பொதிகள் கையாளுதல் மற்றும் விமானங்களில் பனிப்படிவத்தை அகற்றுதல் போன்ற முக்கிய பணிகளை Swissport ஊழியர்கள் மேற்கொள்கின்றனர். வேலைநிறுத்தம் நடைபெற்றால் விமான நிலையச் சேவைகள் பாதிக்கப்படக்கூடும்.

சூரிச்சில் அதிக வாடகைச் சுமை:
அயல் கன்டோன்களுக்கு இடம்பெயரும் மக்கள்

மக்கள் வெளியேறினாலும் நகர்ப்புறங்களில் வீட்டுத் தேவை குறையவில்லை; இரு ஆய்வுகள் காட்டும் நிலவரம்



சுவிட்சர்லாந்தின் Zürich, Genève மற்றும் Basel போன்ற நகர்ப்புறப் பகுதிகளில் அதிக வீட்டு வாடகையும் வீட்டுப் பற்றாக்குறையும் காரணமாக, குடியிருப்பாளர்கள் செலவு குறைந்த அயல் கன்டோன்களுக்கு இடம்பெயரும் போக்கு அதிகரித்துள்ளது.

Wüest Partner நிறுவனத்தின் ஆய்வை மேற்கோள்காட்டி Blick வெளியிட்ட செய்தியின்படி, Zürich கன்டோனிலிருந்து Aargau, Thurgau மற்றும் Schaffhausen நோக்கி மக்கள் நகர்கின்றனர். பிரெஞ்சு மொழிப் பிராந்தியத்தில் Genève குடியிருப்பாளர்கள் Vaud நோக்கியும், Vaud குடியிருப்பாளர்கள் Fribourg மற்றும் Valais நோக்கியும் இடம்பெயர்கின்றனர்.

எனினும், இந்த இடப்பெயர்வு நகர்ப்புற வீட்டுச் சந்தையின் அழுத்தத்தைக் குறைக்கவில்லை. Zürich கன்டோனில் ஆண்டுக்கு ஏனைய கன்டோன்களுடனான இடம்பெயர்வில் சுமார் 3,500 பேரின் நிகர இழப்பு பதிவாகும் நிலையில், வெளி நாடுகளுடனான இடம்பெயர்வில் ஏறத்தாழ 19,000 பேரின் நிகர வருகை உள்ளது.

Genève கன்டோனில் இந்த எண்ணிக்கைகள் முறையே சுமார் 1,400 மற்றும் 10,300 ஆக உள்ளன. Zug கன்டோனில் கடந்த மூன்று ஆண்டுகளின் வருடாந்தச் சராசரிப்படி, ஏனைய கன்டோன்களுக்கு நிகரமாக 40 பேர் இழந்துள்ள நிலையில், வெளிநாடுகளிலிருந்து சராசரியாக 1,041 பேர் வந்துள்ளனர்.

நகர மையங்களிலிருந்து வெளியோரப் பகுதிகளுக்கு நகரும் வளர்ச்சி

UBS ஆய்வும் மக்கள் தொகை வளர்ச்சி பெருநகரங்களின் வெளியோரப் பகுதிகளுக்கு நகர்வதைக் காட்டுகிறது. அதிக வாடகை, வீட்டுப் பற்றாக்குறை, வீட்டிலிருந்து பணியாற்றும் வாய்ப்பு மற்றும் நகரத்திற்கும் சுற்றுப்புறத்திற்கும் இடையிலான வாடகை வித்தியாசம் ஆகியவை இந்த மாற்றத்துக்குக் காரணங்களாகக் குறிப்பிடப்படுகின்றன.

2021-2025 காலப்பகுதியில் Zürich நகரம், ஏனைய நகராட்சிகளுடனான இடம்பெயர்வில் நிகரமாக 21,500 பேரை இழந்துள்ளது. அதே காலத்தில் வெளிநாடுகளிலிருந்து ஏறத்தாழ 38,000 பேரின் நிகர வருகையைப் பதிவு செய்துள்ளது.

வேலைவாய்ப்புகள் நிறைந்த நகரங்களையும் அவற்றைச் சூழ்ந்த பகுதிகளையும் வெளிநாடுகளிலிருந்து வருவோர் தொடர்ந்து நாடுவார்கள் என்பதால், முக்கிய நகரங்களில் வாடகைகள் விரைவில் குறையும் வாய்ப்பு குறைவாகவே இருப்பதாக UBS மதிப்பிடுகிறது.

நடுநிலை நாடான சுவிட்சர்லாந்து ஏன் ஆயுதங்களை ஏற்றுமதி செய்கிறது?



ஆயுத ஏற்றுமதி விதிகளைத் தளர்த்தலாமா? நவம்பர் 29இல் மக்கள் தீர்ப்பு

சுவிட்சர்லாந்தின் போர்த்தளவாட ஏற்றுமதி விதிகளில் மாற்றங்களை ஏற்படுத்தும் சட்டத் திருத்தம் தொடர்பாக 2026 நவம்பர் 29ஆம் திகதி மக்கள் வாக்கெடுப்பு நடைபெறுகிறது.

பாதுகாப்புச் சூழல் மோசமடைந்துள்ள நிலையில், சுவிஸ் ஆயுதத் தொழில்துறைக்கும் கூட்டாளர் நாடுகளுடனான ஒத்துழைப்புக்கும் அதிக நெகிழ்வுத்தன்மை தேவை என மத்திய அரசு வாதிடுகிறது. ஆனால், கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது ஆயுதங்கள் தவறான இடங்களுக்குச் செல்லும் அபாயத்தை அதிகரிக்கும் என எதிர்ப்பாளர்கள் எச்சரிக்கின்றனர்.

நடுநிலைமை இருந்தும் ஆயுதங்கள் ஏன்?

சுவிட்சர்லாந்தின் கொள்கை “ஆயுதமேந்திய நடுநிலைமை” என்பதாகும். ஏனைய நாடுகளுக்கிடையிலான போரில் பங்கேற்காமல் இருப்பதுடன், தனது நிலப்பரப்பையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கத் தயாராக இருப்பதே அதன் பொருள். எனவே, நடுநிலைமை என்பது இராணுவமோ தற்காப்புத் திறனோ இல்லாமல் இருப்பதைக் குறிக்காது.

உள்நாட்டு ஆயுதத் தொழில்துறையைத் தக்கவைப்பதும், சர்வதேச உற்பத்தி மற்றும் விநியோக வலையமைப்புகளில் இணைந்திருப்பதும் சுவிஸின் பாதுகாப்புக்கு அவசியம் என மத்திய அரசு கூறுகிறது. நெருக்கடிக் காலத்தில் தேவையான இராணுவ உபகரணங்களை வெளிநாடுகளிலிருந்து பெறுவதற்கும் இந்த உறவுகள் உதவும் என்பது அரசின் வாதமாகும்.

ஏற்றுமதியின் பெறுமதி எவ்வளவு?

2025ஆம் ஆண்டில் சுவிஸ் நிறுவனங்கள் 948.2 மில்லியன் பிராங்க் பெறுமதியான போர்த்தளவாடங்களை 64 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளன. இது முந்தைய ஆண்டைவிட ஏறத்தாழ 43 சதவீதம்



அதிகமாகும். முக்கிய கொள்வனவு நாடுகளில் ஜெர்மனி, அமெரிக்கா, ஹங்கேரி, இத்தாலி மற்றும் லக்சம்பர்க் இடம்பெற்றன. இந்தத் தொகை ஏற்றுமதியின் பெறுமதியாகும்; அரசுக்குக் கிடைத்த இலாபம் அல்ல.

சட்டத் திருத்தம் என்ன மாற்றங்களைக் கொண்டுவரும்?

முக்கியமாக மூன்று மாற்றங்கள் முன்வைக்கப்படுகின்றன:

- ஆயுத மோதலில் ஈடுபட்டிருந்தாலும், பட்டியலிடப்பட்ட கூட்டாளர் நாடுகளுக்கு நடுநிலைச் சட்டத்திற்கும் சுவிஸின் வெளிநாட்டு அல்லது பாதுகாப்புக் கொள்கை நலன்களுக்கும் பொருந்தும் ஏற்றுமதிகளை அனுமதித்தல்.

- அசாதாரண சூழ்நிலைகளில், சுவிஸின் நலன்களைப் பாதுகாக்கத் தேவையானபோது சில அனுமதி அளவுகோல்களிலிருந்து மத்திய அரசு விலக முடிதல்.

- வாங்கிய போர்த்தளவாடங்களை மற்றொரு நாட்டிற்கு வழங்குவதற்கு சுவிஸின் முன் அனுமதி பெற வேண்டும் என்ற உறுதிமொழியை எல்லா சந்தர்ப்பங்களிலும் கோராமல் இருத்தல்.

ஏற்கனவே வழங்கப்பட்ட மறுஏற்றுமதி உறுதிமொழிகள் தொடர்ந்து செல்லுபடியாகும். சர்வதேசக் கடமைகளும் நடுநிலைச் சட்டமும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

உக்ரைனுக்கு நேரடியாக ஆயுதங்களை வழங்க முடியுமா?

சட்டத் திருத்தம் ஏற்கப்பட்டாலும் உக்ரைனுக்கான நேரடி போர்த்தளவாட ஏற்றுமதி அனுமதிக்கப்படாது என SECO விளக்குகிறது. ரஷ்யாவுக்கு ஆயுதத் தடை விதித்துள்ள நிலையில், போரில் இராணுவ நன்மையை வழங்கக்கூடிய உபகரணங்களை உக்ரைனுக்கு வழங்குவதும் நடுநிலைச் சட்டத்தின் சமமாக நடத்தும் கடமையுடன் முரண்படும்.

மறுஏற்றுமதியில் கூடுதல் நுணுக்கம் உள்ளது: வாங்கும் நாடு தனது சொந்தத் தேவைக்காகப் பெறுவதாக நம்பகமான உறுதி அளித்து, மறுஏற்றுமதித் தடை உறுதிமொழி கோரப்படாத நிலையில், பல ஆண்டுகளுக்குப் பின்னர் அது உக்ரைனுக்கு மாற்றப்படுவது நடைமுறையில் சாத்தியமாகலாம் என SECO தெரிவிக்கிறது. ஆகவே, "எந்த வழியிலும் உக்ரைனுக்குச் செல்ல முடியாது" என்று பொதுவாகக் கூறுவது துல்லியமல்ல.

ஆதரவாளர்களும் எதிர்ப்பாளர்களும் கூறுவது என்ன?

சுவிஸின் தற்காப்புத் திறனையும் ஆயுத விநியோகப் பாதுகாப்பையும் வலுப்படுத்தும் எனக் கூறி மத்திய அரசும் நாடாளுமன்றமும் திருத்தத்தை ஆதரிக்கின்றன.

மறுபுறம், மறுஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் தளர்ந்தால் சுவிஸ் ஆயுதங்கள் மனித உரிமைகளை மீறும் ஆட்சிகள் அல்லது பயங்கரவாத அமைப்புகளிடம் சென்றடையும் அபாயம் அதிகரிக்கும் என வாக்கெடுப்பைக் கோரிய எதிர்ப்புக் குழு வாதிடுகிறது.

சுவிஸ் குடியுரிமை:
10 ஆண்டுகள் காத்திருப்பை 5 ஆண்டுகளாகக் குறைக்கலாமா?

மத்திய அரசு 2026 ஒக்டோபர் 28ஆம் திகதி வெளியிட்ட அறிவிப்பில் இதனை உறுதிப்படுத்தியுள்ளது. அன்றைய வாக்கெடுப்புக்கான ஐந்து விடயங்களில், «Für ein modernes Bürgerrecht (Demokratie-Initiative)» – «நவீன குடியுரிமைக்காக: ஜனநாயக முன்முயற்சி» இரண்டாவது விடயமாக இடம்பெற்றுள்ளது. அதன் மத்திய அரசிதழ் குறிப்பு BBl 2026 2714 ஆகும்.



என்ன மாற்றம் கோரப்படுகிறது?

ஐந்து ஆண்டுகள் சட்டபூர்வமாக சுவிட்சர்லாந்தில் வசித்தவர்கள், ஏனைய முன்மொழியப்பட்ட நிபந்தனைகளையும் நிறைவேற்றினால் குடியுரிமை பெறும் உரிமையைக் கொண்டிருக்க வேண்டும் என முன்முயற்சி கோருகிறது.

தேசிய மொழியொன்றில் அடிப்படை அறிவு, நீண்டகாலச் சிறைத்தண்டனைக்கு உள்ளாகாமல் இருத்தல், நாட்டின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இல்லாதிருத்தல் ஆகியவை அந்த நிபந்தனைகளாகும். தற்போதைய C நிரந்தர வசிப்பிட அனுமதி கட்டாயத்தையும் நீக்கக் கோருகிறது.

மேலும், குடியுரிமை நடைமுறையின் இறுதி அதிகாரத்தை மத்திய அரசிடம் ஒப்படைத்து, கன்டோன்கள் மற்றும் நகராட்சிகளுக்கிடையிலான வேறுபாடுகளைக் குறைப்பது இதன் நோக்கமாகும்.

தற்போது நடைமுறையில் இருப்பது என்ன?

சாதாரண குடியுரிமைக்கு விண்ணப்பிக்க, பொதுவாகக் கணக்கில் கொள்ளத்தக்க பத்து ஆண்டுகள் சுவிட்சர்லாந்தில் வசித்திருப்பதுடன், விண்ணப்பிக்கும் நேரத்தில் C அனுமதியும் பெற்றிருக்க வேண்டும். சமூக ஒருங்கிணைவு, சுவிஸ் வாழ்க்கை முறையை அறிந்திருத்தல் உள்ளிட்ட நிபந்தனைகளும் பொருந்தும்.

B அல்லது C அனுமதியுடன் வசித்த காலம் கணக்கில் சேர்க்கப்படுகிறது. F அனுமதியுடன் வசித்த காலத்தில் பாதி கணக்கிடப்படும்; N மற்றும் L அனுமதிக் காலங்கள் சேர்க்கப்படுவதில்லை. கன்டோன் அல்லது நகராட்சியில் வசித்திருக்க வேண்டிய காலம் தொடர்பான உள்ளூர் நிபந்தனைகளும் உள்ளன.

மத்திய அரசு ஏன் எதிர்க்கிறது?

குடியுரிமைக்கான நிபந்தனைகளை இந்த முன்முயற்சி அளவுக்கு அதிகமாகத் தளர்த்துவதாக மத்திய அரசு கருதுகிறது. மத்திய அரசு, கன்டோன், நகராட்சி ஆகிய மூன்று நிலைகளிலும் தற்போது உள்ள பொறுப்புகளைத் தொடர வேண்டும் என்பதும் அதன் நிலைப்பாடாகும்.

அதேவேளை, நடைமுறைகளை எளிமைப்படுத்தவும் ஒருங்கிணைக்கவும் வேண்டிய தேவையை மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறது. தற்போதைய சட்ட வரம்பிற்குள் நிர்வாகத் தடைகளைக் குறைப்பதையே அது விரும்புகிறது.

தெரிந்துகொள்ளுங்கள் கட்டாயம்

“ஐந்து ஆண்டுகள் வசித்தால் சுவிஸ் குடியுரிமை” என்ற விதி தற்போது நடைமுறையில் இல்லை. இது மக்களின் தீர்ப்புக்காக முன்வைக்கப்பட்டுள்ள மாற்றமாகும். ஐந்து ஆண்டுகள் முடிந்தவுடன் தானாகக் குடியுரிமை வழங்கப்படும் என்பதும் இதன் பொருளல்ல.

KAMAL KREDIT

KAMAL KREDIT &
HYPOTHEK IMMOBILIEN



உங்கள்
கனவுகளுக்கு
வழிகாட்டும்
நிதிச் சேவைகள்

வங்கிக்கடன்

வங்கிக்கடன் பெறுவதில் உள்ள தடைகளைச் சரிசெய்து, கடன் பெற உதவுகிறோம்.

வீட்டுக்கடன்
(Hypothek)

நீங்கள் விரும்பிய இடத்தில் வீடு, காணி வாங்குவதற்குத் தேவையான உதவிகளை வழங்குகிறோம்.

ஆயுள் காப்புறுதி
Lebensversicherung

உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்திற்கான ஆயுள் காப்புறுதிச் சேவைகள்.

இன்றே தொடர்புகொள்ளுங்கள்!

043 333 5971 | 079 650 2615

swisssenthu@hotmail.com | info@kamalkredit.ch

Zuercherstrasse 47b, 8426 Lufingen Switzerland

www.kamalkredit.ch

சுவிஸில் காரை நிறுத்த எங்கு அதிக செலவு?

Bern முதலிடம் — Frauenfeld குறைந்த கட்டணம்!



சுவிட்சர்லாந்தில் வாகன நிறுத்தக் கட்டணங்கள் நகரத்திற்கும் நிறுத்துமிடத்திற்கும் ஏற்ப பெரிதும் வேறுபடுவதாக HolidayCheck நிறுவனத்தின் 2026 ஒப்பீடு தெரிவிக்கிறது.

20 நகரங்களில் 180க்கும் மேற்பட்ட வாகன நிறுத்துமிடங்களையும், 30க்கும் மேற்பட்ட சுற்றுலாத் தலங்களையும் உள்ளடக்கிய இந்த ஆய்வில், ஆய்வுக்குட்பட்ட நகரங்களின் மணிநேரச் சராசரி சுமார் CHF 2.40 ஆக உள்ளது. இது நாடு முழுவதற்குமான அதிகாரப்பூர்வக் கட்டணமல்ல.

ஆய்வுக்குட்பட்ட நகரங்களில் Bern அதிக மணிநேரச் சராசரியையும், Frauenfeld குறைந்த சராசரியையும் கொண்டுள்ளன. தனிப்பட்ட நிறுத்துமிடங்களில் Basel நகரின் Centralbahn-parking P1 மணிக்கு CHF 7 என்ற அதிக கட்டணத்துடன் இடம்பெற்றுள்ளது.

மணிநேரக் கட்டணம்: எந்த நகரத்தில் எவ்வளவு?

நகரம்	ஆய்வில் பதிவான சராசரி – CHF
Bern	4.05
Lausanne	3.55
Luzern	3.52
Genève	3.30
Basel	3.15
Zürich	2.95
Frauenfeld	0.74

Matterhorn மலையில் அமெரிக்க இளைஞர் உயிரிழப்பு!

மேட்டர்ஹார்ன் மலையில் பயங்கரப் பாறைச் சரிவு!



சுவிட்சர்லாந்தின் Matterhorn மலையில் ஏறிக்கொண்டிருந்த 20 வயது அமெரிக்க இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

டெக்சாஸ் மாநிலத்தின் Austin நகரைச் சேர்ந்த Kieran Liner, ஒக்டோபர் இறுதியில் நண்பருடன் மலையேற்றத்தில் ஈடுபட்டிருந்ததாகச் செய்தி தெரிவிக்கிறது.

சுமார் 3,500 மீற்றர் உயரத்தில் அவர்கள் இருந்தபோது அருகில் பாறைகள் சரிந்ததாக வலே கன்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அதன் பின்னர் நண்பரைக் காணாததால், உடன் சென்றவர் உடனடியாக உதவி கோரியுள்ளார்.

ஹெலிகொப்டரில் சென்ற மீட்புக் குழுவினர் இளைஞரை விரைவாகக் கண்டுபிடித்தபோதும், அவர் ஏற்கனவே உயிரிழந்திருந்ததாகப் பொலிஸ் தகவலை மேற்கோள்காட்டிச் செய்தி குறிப்பிடுகிறது.



லுசேர்னை அதிரவைத்த இரட்டைப் பேரொலி: F/A-18 விமானங்களின் ஒலிவேகப் பாய்ச்சலே காரணம்!



லுசேர்ன் பகுதியில் ஒக்டோபர் 29ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குச் சற்று முன்னர் கேட்ட இரண்டு பலத்த பேரொலிகள் குடியிருப்பாளர்களைத் திடுக்கிடச் செய்தன.

சுவிஸ் விமானப்படையின் இரண்டு F/A-18 போர் விமானங்கள் ஒலியின் வேகத்தைத் தாண்டிப் பறந்ததால் இந்தச் சத்தம் ஏற்பட்டதாகச் செய்தி தெரிவிக்கிறது.

குடியிருப்புகள் அதிர்ந்ததாக மக்கள் தெரிவித்ததுடன், பலர் பேரொலி குறித்த இணையத்தளத்திலும் பதிவிட்டுள்ளனர்.

குறித்த விமானங்கள், அரச விமானம் ஒன்றின் இராஜதந்திரத் தகவல்கள்



பொருந்துகின்றனவா என்பதைச் சரிபார்க்கும் பணியில் ஈடுபட்டிருந்ததாக மத்திய பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது. ஆண்டுக்கு சுமார் 200 இத்தகைய பணிகள் இடம்பெறுவதாகவும், சில சந்தர்ப்பங்களில் போர் விமானங்கள் ஒலிவேகத்தைத் தாண்ட வேண்டியிருக்கலாம் எனவும் பேச்சாளர் விளக்கியுள்ளார்.

நூலாசிரியர் கமலினி கதிர் அவர்களின் 17 வது நூல் "தேடல்கள் 2" அறிமுக விழா

சரவணப்பெருமாள் நல்லதம்பி.










எழுத்தாளர் கமலினி கதிர் அவர்களின் பதினேழாவது நூல் அறிமுக விழா ஒர்லிக்கோன் சூரிச் சுவிற்சர்லாந்தில் 01..11.2026 சிறப்பாக நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக செங்காலன் மாகாண நகர முதல்வர் திரு.ஜெயக்குமார் துரைராஜா கலந்து சிறப்பித்திருந்தார். இந்நூல் இளையர்களுக்கான எமது வரலாற்றுத் தேடல்கள் பற்றிய ஒரு சிறு நூல். நூலாசிரியரின் அனுபவங்களும், தமிழர்கள் எவ்வாறு சிங்கள தமிழ் அரசியல்வாதிகளால் வஞ்சிக்கப்பட்டார்கள் என்பதும் கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. 1970க்குப் பின் பிறந்தவர்களுக்குத் தெரியாத பல விடயங்கள் இதில் சொல்லப்பட்டிருக்கிறது.

அரங்கு நிறைந்த கூட்டத்தில் அக்கினிப் பறவைகள் அமைப்பினர் கலந்து கொண்டதுடன் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தது எல்லோருக்கும் மனநிறைவைத் தருவதாக இருந்தது. அவர்களுடன் நூலாசிரியரின் மாணவர்களும் மங்கல விளக்கேற்றினார்கள். பெரியவர்கள் நடத்தும் விழாக்களில் பெரியவர்களே முன்னிலைப்படுத்தப்படுவது நடைமுறையாக இருக்கும் வேளையில் இளையவர்கள் உள் வாங்கப்பட்டது மகிழ்ச்சியாக இருந்தது. நூல் ஆசிரியரின் மாணவர்கள் கலந்து சிறப்பித்ததுடன், அவர்கள் பெற்றோரும் வந்திருந்தமை பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

ஊடகவியலாளர் சண்.தவராஜா தலைமையில் நிகழ்வு நடை பெற்றது. இறைவணக்கத்தை பல் மருத்துவ மாணவி அமேயா பகீரதன் ஆரம்பிக்க தமிழ்த்தாய் வாழ்த்தும், வரவேற்பு நடனத்தை செல்வி.கேதாரணி இரட்ணகுமார் (நாட்டியமாமணி,யோகாச்சார்யா சிறீமதி.வாணி சர்மாவின் மாணவி) ஆடியதுடன் (மருத்துவ பீட மாணவி)கீர்த்தனா பிரதீபன் வரவேற்புரை நிகழ்த்தினார். முக்கிய நிகழ்வுகளில் இளையவர்களே முன்னிலைப் படுத்தப்பட்டது அவர்களை ஊக்குவிக்கும் நிகழ்வாக அமைந்தது. திரு.ஜெயக்குமாரின் உரையைத் தொடர்ந்து மீரா சிவராசலிங்கம் (சூரிச் ஆயர்வேத வைத்தியர்), சரவணப்பெருமாள் நல்லதம்பி (விழா ஒருங்கிணைப்பாளர்) அந்தோனி நிக்கோலாப்பிள்ளை (மனிதநேய செயற்பாட்டாளர்), எழுத்தாளர் பொலிகை ஜெயா, ஆசிரியை சாம்பவி மோகனதாஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். திருமதி.வதனி சிறீரஞ்சன்(குடும்ப நல ஆலோசகர் சூரிச்) அறிமுகவுரையும், சிறப்பு உரையை (எழுத்தாளர் நாவலாசிரியர்) குடத்தனை உதயன் வழங்கவும் நூலாசிரியரின் ஏற்புரையுடன் விழா இனிதே முடிவடைந்தது.

நூலாசிரியர் கமலினி கதிர் அவர்களின்

17 வது நூல் "தேடல்கள் 2" அறிமுக விழா














நூலாசிரியர் கமலினி கதிர் அவர்களின்

17 வது நூல் "தேடல்கள் 2" அறிமுக விழா


















சூரிச்சில் நடைபெற்ற 'வெள்ளிவீதி 2' இலக்கியக் கூடுகை















சூரிச்சில் 'வெள்ளிவீதி 2' இலக்கியக் கூடுகை நவம்பர் 1 ஆம் திகதி நடைபெற்றது. Birmensdorferstrasse 67இல் இடம்பெற்ற இந்நிகழ்வில், பல்வேறு படைப்புகளை மையமாகக் கொண்ட இலக்கிய உரையாடல்கள் இடம்பெற்றன.

முதலாவது அமர்வில், காயத்ரி ஆர். எழுதிய 'பொறுமையற்றவர்கள்' படைப்பை மையமாகக் கொண்டு அரவிந்த் அப்பாத்துரை உரையாடினார். இரண்டாவது அமர்வில், தர்மினியின் 'கடுதாசி நட்சத்திரம்' குறித்து இளவாலை விஜயேந்திரன் உரையாடினார்.

மூன்றாவது அமர்வில், நவமகனின் 'ஆகிதம்' படைப்பை மையமாகக் கொண்டு அகுரா உரையாடினார். நான்காவது அமர்வில், பிரசாந்தி சேகரத்தின் 'வசந்தம் வராத காட்டில் பறவையின் ஓர் அழைப்பு' குறித்து தேவ அபிரா உரையாடினார்.

ஐந்தாவது அமர்வில், லிவிங் ஸ்மைல் வித்யாவின் 'அங்கம்' படைப்பை மையமாகக் கொண்டு ஷோபாசக்தி உரையாடினார்.

சூரிச்சில் நடைபெற்ற 'வெள்ளிவீதி 2' இலக்கியக் கூடுகை













நூல் அறிமுகம்






வெற்றிச்செல்வி அவர்களின்
“தீபகச்செல்வன்”

எழுத்தாளர் **சயந்தன்** உரை





விவேகானந்தனூர் சதீஸ் அவர்களின்
“துருவேறும் கைவிலங்கு”

மூத்த ஊடகவியலாளர் **கனகரவி** உரை

நாள் : 13.12.2026 ஞாயிறு

நேரம் : 10 மணி தொடக்கம் மாலை 15:00 வரை.
(மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது)

இடம் : தமிழர் களரி ஆவணக் காப்பகம்.
Europaplatz 1b,
3008 Bern, Swiss.

கேள்வி பதில் நேரம்.

16 ஆண்டுகள் சதீஸ் அவர்களின் சிறை அனுபவம் சார்ந்து கேள்வி பதில் நிகழ்வு இறுதி நிகழ்வாக இடம்பெறும்.

தொடர்புகட்கு :
கரன் : +41 76 309 51 05
ஜெராட் : +41 79 550 85 55
வவி : +41 76 492 90 34

அரங்கு ஒருங்கிணைப்பாளர்கள் :
ஜனனி, இணுவையூர் மயூரன்



'மேடையின் நாயகன்' தங்கப் பதக்கம் பெற்ற வினாசித்தம்பி பாஸ்கர்





Star Of Eelam அமைப்பு கடந்த சனிக்கிழமை சுவிட்சர்லாந்தில் நடத்திய 'Beat Your Heart' நிகழ்வில், வினாசித்தம்பி பாஸ்கர் அவர்களுக்கு 'மேடையின் நாயகன்' தங்கப் பதக்கம் (GOLD MEDAL) வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

தனது வாழ்வின் பெரும்பகுதியை நாடகக் கலைக்காக அர்ப்பணித்து, தமிழ்க் கலைத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பைப் பாராட்டும் வகையில் அவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது.

நன்றி நவிலல்



அமரர்

Phadgunasingam Nadgunam

21.03.1962 – 12.10.2026

எங்கள் அன்பிற்குரியவரின் மறைவால் துயருற்ற
எங்களுக்கு ஆறுதலாகவும் ஆதரவாகவும் துணைநின்ற
அனைவருக்கும் எங்கள் இதயபூர்வமான நன்றிகள்.

நேரில் வருகை தந்தும், தொலைபேசி மற்றும் இரங்கல்
செய்திகள் மூலமும் எங்கள் துயரில் பங்குகொண்ட
உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி.

இறுதி அஞ்சலியிலும் இறுதிச் சடங்குகளிலும்
கலந்துகொண்டவர்களுக்கும், ஏற்பாடுகளில் உதவிய
அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

நீங்கள் காட்டிய அன்பும் பரிவும் எங்களுக்குப்
பெரும் ஆறுதலாக அமைந்தன.

உங்கள் நினைவுகள் என்றும் எங்கள் இதயங்களில்...

நன்றியுடன்,
குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள்
Bex, Switzerland

மகன் Presath
+41 79 672 87 75

மகன் Purusoth
+41 79 926 19 92



லுசேர்னில் வேலைவாய்ப்பு வளர்ச்சி மந்தம்: 2024இல் 1,065 முழுநேரப் பணியிடங்களுக்கு இணையான அதிகரிப்பு

லுசேர்ன் கன்டோனில் 2024ஆம் ஆண்டு வேலைவாய்ப்பின் அளவு, முந்தைய ஆண்டைவிட 1,065 முழுநேரப் பணியிடங்களுக்கு இணையாக அதிகரித்துள்ளது. எனினும், முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இந்த வளர்ச்சி குறைவாக இருந்ததாக லுசேர்ன் புள்ளிவிவர நிறுவனம் (LUSTAT), நவம்பர் 3ஆம் திகதி வெளியிட்ட தகவலில் தெரிவித்துள்ளது.

2024இல் கன்டோன் முழுவதும் மொத்தம் 274,115 பணியிடங்கள் நிரப்பப்பட்டிருந்தன. முழுநேர மற்றும் பகுதிநேர வேலைகளின் பணிநேரத்தை முழுநேர அடிப்படையில் கணக்கிடும்போது, இது 205,335 முழுநேரப் பணியிடங்களுக்குச் சமமாகும்.

சேவைத்துறையில் வளர்ச்சி; தொழில்துறையில் வீழ்ச்சி

சேவைத்துறையில் வேலைவாய்ப்பின் அளவு 1,788 முழுநேரப் பணியிடங்களுக்கு இணையாக, அதாவது 1.3 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. அதேவேளை, தொழில்துறையில் 621 முழுநேரப் பணியிடங்களுக்கும் விவசாயத்தில் 102 முழுநேரப் பணியிடங்களுக்கும் இணையான குறைவு பதிவாகியுள்ளது.

மொத்த வேலைவாய்ப்பு அளவில் சேவைத்துறை 70.2 சதவீதத்தையும், தொழில்துறை 25.8 சதவீதத்தையும், விவசாயம் 4.1 சதவீதத்தையும் கொண்டுள்ளன.

தனித்தனி பொருளாதாரப் பிரிவுகளில், பொருட்கள் உற்பத்தித்துறை 31,954 முழுநேரப் பணியிடங்களுடன் முதலிடத்தில் உள்ளது. சுகாதாரம் மற்றும் சமூகநலத்துறை 27,421 பணியிடங்களுடனும், வர்த்தகத்துறை 27,275 பணியிடங்களுடனும் அடுத்த இடங்களில் உள்ளன.

சிறு நிறுவனங்களின் ஆதிக்கம்

லுசேர்னின் 30,919 சந்தைசார் நிறுவனங்களில் 98.8 சதவீதமானவை 250க்கும் குறைவான ஊழியர்களைக் கொண்டுள்ளன. அவற்றில் 86.9 சதவீதமானவை பத்துக்கும் குறைவான ஊழியர்களுடன் இயங்கும் மிகச் சிறிய நிறுவனங்களாகும்.

2011ஆம் ஆண்டிலிருந்து பெண்களின் வேலைவாய்ப்பு அளவு, ஆண்களைவிட வேகமாக வளர்ந்துள்ளது. பெண்கள் சேவைத்துறையிலும் ஆண்கள் தொழில்துறையிலும் அதிகளவில் பணியாற்றுகின்றனர். குறிப்பாக, சுகாதாரம் மற்றும் சமூகநலத்துறையில் பணியாற்றுவோரில் 79 சதவீதமானவர்கள் பெண்களாவர்.

31வது ஆண்டில் வலி சுமந்து, வழி தேடிய துயரம்

1995 அக்டோபர் யாழ் இடப்பெயர்வு



நவீனன்

உலக வரலாற்றில் எந்த ஒரு இனமும் சந்தித்திராத பாரிய இடப்பெயர்வை யாழ் மக்கள் சந்தித்தார்கள். 1995-ம் ஆண்டு அக்டோபர் 30-ந் தேதி இந்த மாபெரும் அவலமிகு இடப்பெயர்வு நடந்தது.



யாழ்ப்பாண இடப்பெயர்வு மானுட வரலாற்றில் வலிசுமந்த வரலாறாகவே என்றும் நிலைத்து நிற்கின்றது. யாழ்ப்பாண குடாநாட்டில் அப்போதிருந்த அண்ணளவான மக்கள் தொகை ஐந்து இலட்சம் ஆகும். குடாநாட்டினை வடபகுதியின் மற்றைய பிரதேசங்களுடன் இணைத்திருந்த இரண்டு வீதிகளினூடாக ஐந்து இலட்சம் மக்கள் ஓர் இரவு விடிவதற்குள் கடந்து சென்ற கொடிய நாட்களை யாரும் மறக்க மாட்டார்கள்.

(1995-ம் ஆண்டு அக்டோபர் 30 இல் அவலமிகு யாழ் இடப்பெயர்வின், 31வது ஆண்டின் நினைவு வலிகளை சுமந்து, தமிழர் வழி தேடிய துயரமிகு நாட்களின் நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகிறது)



மிகச்சரியாக இன்றைக்கு 31வருடங்களின் முன் யாழ் இடப்பெயர்வானது 1995 அக்ரோபர் 30இல் நீதி மறுக்கப்பட்ட மக்களாக தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல் அன்று அறுக்கப்பட்டது. அன்றைய கொடூர நாட்கள் மிகப்பெரும் மனித அவலத்தை சுமந்தது.

எத்தனையோ ஆண்டு காலமாக தங்கள் சொந்த மண்ணில் வாழ்ந்த மக்கள் ஒரே இரவில் ஒன்றாய்க் கூடி வாழ்ந்த மண்ணைவிட்டு இடம்பெயர்வார்கள் என எவரும் நினைத்திருக்க மாட்டார்கள்.

துயர வலிசுமந்த வரலாறு :

இந்த துயரத்தை எக்காலத்தினாலும் அழிக்க முடியாது. பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்கள் இன்னமும் மக்கள் மனதில் நிலைத்து நிற்கின்றது.

யாழ் இடம்பெயர்வின் போது, இனி வீடு வருவோமோ என்று உடைந்து போனவர்கள், எங்கே போவது என்ற திசை தெரியாதவர்கள், வயதான அம்மா அப்பா என வீட்டிலே விட்டு வந்தவர்கள், நிறைமாத கர்ப்பிணிகள், முதியவர்களைச் சுமந்தவர்கள் என வீதியில் ஒரு அடி எடுத்து வைப்பதற்கு ஒரு மணி நேரம் எடுத்த கோரமான நாட்களாகும்.

சொந்த மண்ணிலிருந்து துரத்தப்பட்ட அந்தக் கொடூரம் மிக்க நாட்களை யாரும் மறக்க மாட்டார்கள். தண்ணீர் கேட்டு அழுத குழந்தைகளுக்கு பெய்த மழையை குடையில் ஏந்தி பருக்கியவர்கள், வீதி வாளிகளில் தொங்கும் தண்ணீரை எடுத்து குடித்தவர்கள், வீதியில் இறந்த முதியவர்களை அந்த சதுப்பு நிலத்தில் குழி தோண்டி புதைத்த கொடுமை மிக்க காலமாகும்.

வலிகள் சுமந்து வழி தேடிய இடப்பெயர்வு



‘சூரியக் கதிர்’ ராணுவ நடவடிக்கைகள் போல தமிழ் பேசும் மக்கள் மீது தொடுக்கப்பட்ட கொடுமையான ஆக்கிரமிப்புக்கள் இன்று நேற்று மட்டும் நடந்தது அல்ல.

இந்த சூரியக்கதிர் நடவடிக்கை 1995 அக்டோபர் 17 ல் தொடங்கப்பட்டது. பலாலி, காங்கேசன்துறை போன்ற படைத்தளங்களிலிருந்து முழு யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றும் நோக்கில் படைத்தரப்பினர் போரினைத் தொடங்கியிருந்தார்கள். எங்கும் வான்வழித் தாக்குதல்களும் ஷெல் வீச்சுக்களும் துப்பாக்கிச் சூடுகளும் சரமாரியாக நடத்தப்பட்டன.

பலாலி இராணுவ முகாமிலிருந்து யாழ்ப்பாணத்தினை கைப்பற்ற இராணுவத்தினர் தாக்குதலை நடாத்தி பாரிய இன அழிப்பு நடவடிக்கையை இராணுவம் மேற்கொள்ள இருப்பதாக கருதி பாதுகாப்பான பிரதேசங்களான தென்மராட்சி வடமராட்சி வன்னிப் பகுதிகளுக்கு மக்கள்இ டம்பெயர்ந்தனர்.

யாழ்ப்பாணத்தில்மின்சாரம் இல்லாத அந்தக் காலத்தில் , அன்றைய கும்மிருட்டினில் அத்தனை மக்களும் தங்கள் சொந்த வாழ்வின் வேர்கள் பிடுங்கி எறியப்பட்டு, எங்கே போவது, என்ன செய்வது என்னும் எந்தச் சிந்தனையும் இன்றி உயிர் பிழைக்க வேண்டும் என்ற நோக்கோடு செம்மணியால் நடந்தார்கள். விமான குண்டு வீச்சினாலும் ஆயிரக்கணக்கில் மக்கள் மடியும் நிலையிலிருந்தும், வெட்ட வெளிகளில் பல மணிநேரங்களிற்கும் மேலாக நடக்க வேண்டியிருந்தனர்.

மூட்டை முடிச்சுக்களை கட்டி மக்கள் எல்லோரும் வீதிகளில் இறங்க வீதிகளும் இறுகிப்போனது. நடந்தும் தங்க இடமெதுவும் இன்றி ஆலயங்கள், தேவாலயங்கள், பேருந்து நிலையங்கள் என கண்ணில் பட்ட இடங்களில் மக்கள் தங்கள் நாட்களை கழித்தனர்.



1995 மாபெரும் யாழ்ப்பாண இடப்பெயர்வு நினைவுநாள்

வலிசுமந்த வரலாற்றை யார் மறப்பர்?

அன்றைய யாழ் மக்களின் இரவு மிகப்பெரும் மனித அவலத்தை சுமந்தது. இனி வீடு வருவோமோ என்று உடைந்து போனவர்கள், எங்கே போவது என்ற திசை தெரியாதவர்கள், சொந்தங்களை தொலைத்து விட்டு வந்தவர்களாக, காலங்காலமாய் வாழ்ந்த மண்ணை விட்டு ஒரே இரவினில் அவதிக்குள்ளான வலி முடிவடையாமல், இன்னமும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

உலக வரலாற்றில் யாழ் மக்களின் துயரமிகு இடப்பெயர்வைப் போல வேறு எந்த உலக நாட்டு மக்களும் சந்தித்திருக்க மாட்டார்கள். ஆர்மேனிய மக்களின் வரலாற்றில் நடந்த மிகப்பெரிய துயரமான 1915 இனப்படுகொலை சம்பவங்கள் போல் 1995 யாழ் இடப்பெயர்வு தமிழ் மக்களின் துயர வரலாற்றில் இடம்பெற்றது.

1995 சூரியக்கதிர் நடவடிக்கை எனும் அந்தக் கொடிய யுத்தத்தால், யாழ்ப்பாணம் தீவிர யுத்த காயங்களுக்கு உள்ளானது. இன்றுவரை ஆறாத காயங்களும் சிதைவுகளும் மக்கள் மனதில் ஏற்பட்டுக் கொண்டேதானிருக்கின்றன.

காலங்காலமாய் வாழ்ந்த மண்ணை விட்டு ஒரே இரவினில் நிர்ப்பந்தங்களால் துரத்தப்பட்ட அந்த வலி, அதே வலி இன்னமும் தமிழ் மக்கள் மனதிலிருந்து நீக்கப்படவில்லை.

எத்தனை ஆண்டு காலமாக போராட்டங்கள் தொடர்ந்து கொண்டிருந்தாலும் தமிழர்கள் இன்னும் விடுதலைக்காய் ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள்.





வடக்கு மாகாணப் பள்ளித் தோட்டத் திட்டம்: வகுப்பறைக் கற்றலை வீட்டுத் தோட்டங்களுடன்



தயாரிப்பு: லயன் ராஜ் சிவநாதன்,
இயக்குநர் குழு உறுப்பினர்,
திருகோணமலை ஜின்கோ (பதிவு எண்: 5, D306-D9)

ராஜ் சிவநாதன் - மெல்பேர்ன், அவுஸ்திரேலியா

வடக்கு மாகாண ஆளுநரின் ஆசியுடனும் ஆதரவுடனும், மாணவர்களுக்கு நடைமுறைச் சுற்றுச்சூழல் கல்வியை வழங்கும் நோக்கில் புதிய பள்ளித் தோட்டத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படுகிறது. பள்ளிகளில் செடிகளை வளர்ப்பதுடன், தாங்கள் கற்றவற்றைத் தங்கள் குடும்பத்தினருடனும் சமூகத்தினருடனும் பகிர்ந்துகொள்ளவும் இந்தத் திட்டம் மாணவர்களை ஊக்குவிக்கும்.

லயன்ஸ் மாவட்டம் D5-இன் கீழ் இயங்கும் கொழும்பு ஹெரிடேஜ் கிரீன் லயன்ஸ் கழகம் இந்தத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. கடந்தகால கவுன்சில் தலைவர் லயன் இந்திரா கௌஷல் ராஜபக்ஷ இதற்கான ஆலோசனையையும் வழிகாட்டுதலையும் வழங்குகிறார். மாவட்டம் D5 ஆளுநர் லயன் கயான் லக்மால் மற்றும் லயன்ஸ் மாவட்டம் D12 ஆளுநர் லயன் திருநாவுக்கரசு உதயசூரியன் ஆகியோரும் ஆதரவு வழங்குகின்றனர். ஜப்பானைச் சேர்ந்த நன்கொடையாளர் லயன் டாக்டர் சிவசுந்தரம் சுகர்ணன் ஊடாக இத்திட்டத்துக்கு நிதியுதவி கிடைக்கிறது.

வடக்கு மாகாணத்தை உள்ளடக்கிய லயன்ஸ் மாவட்டம் D12 இத்திட்டத்தை ஒருங்கிணைக்கும். அதன் நடைமுறைப்படுத்தலை TMC யாழ்ப்பாணம் கண்காணிக்கும். TMC யாழ்ப்பாணத்துக்குத் தலைமை தாங்கும் லயன் டாக்டர் S.T.S. சந்திரகுமார், லயன்ஸ் மாவட்டம் D12-இன் வலயத் தலைவராகவும் உள்ளார். கொழும்பு ஹெரிடேஜ் கிரீன் லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன் தம்மிக்க சமரவிக்ரமவும் சேவைப் பிரிவுத்

தலைவர் லயன் டெரன்ஸ் குணவர்தனவும் இத்திட்டத்தை முன்னெடுக்கின்றனர்.

மாவட்டம் D12-க்கும், மாவட்டம் D5-இல் உள்ள கொழும்பு ஹெரிடேஜ் கிரீன் லயன்ஸ் கழகத்துக்கும் இடையிலான முதலாவது கூட்டாண்மை இதுவாகும். லயன்ஸ் தலைவர்கள், கல்வித்துறை அதிகாரிகள் மற்றும் TMC யாழ்ப்பாணம் ஆகியோரை ஒன்றிணைத்து, சுற்றுச்சூழல் கற்றலை மாணவர்களின் அன்றாட வாழ்வின் ஒரு பகுதியாக்குவதே இக்கூட்டாண்மையின் நோக்கமாகும்.

பள்ளித் தோட்டங்களையும் வீட்டுத் தோட்டங்களையும் இணைப்பதே இத்திட்டத்தின் அடிப்படைக் கருத்தாகும். மண்ணைப் பராமரித்தல், உணவுப் பாதுகாப்பு, உயிர்ப்பல்வகைமை மற்றும் காலநிலைத் தாக்கங்களைத் தாங்கும் திறன் ஆகியவற்றைப் பற்றி கற்றுக்கொள்வதுடன், காய்கறிகள், பழ மரங்கள் மற்றும் பிற பயனுள்ள தாவரங்களை வளர்க்கும் வாய்ப்பும் மாணவர்களுக்குக் கிடைக்கும். தாங்கள் கற்ற தோட்டக்கலை அறிவை குடும்பத்தினருடன் பகிர்ந்து, வகுப்பறைக்கு அப்பாலும் இந்தக் கற்றலை விரிவுபடுத்தலாம். பொருத்தமான இடங்களில், பள்ளித் தோட்டத்தில் விளையும் காய்கறிகள் மாணவர்களின் உணவுத் தேவைக்கும் பயன்படுத்தப்படலாம்.

பசுந்தாள் உரமாகவும் மூடாக்காகவும் பயன்படுத்தக்கூடிய, வேகமாக வளரும் பல்பயன் மரமான Gliricidia sepium (கிளிரிசிடியா செபியம்) வளர்ப்பதையும் இத்திட்டம் ஊக்குவிக்கிறது. இது மண்ணின் வளத்தை மேம்படுத்தவும் மண் அரிப்பைக் குறைக்கவும் உதவக்கூடும். மேலும், உயிர்த்திணிவை வழங்குவதுடன், சிறு விவசாயிகளின் நிலையான வாழ்வாதாரத்துக்கும் ஆதரவாக அமையும்.

இத்திட்டத்தின் விளம்பரப் பொருட்களில், ஐந்து ஆண்டுகளில் 3.7 மில்லியன் செடிகளையும் மரங்களையும் நடுவதை இலக்காகக் குறிப்பிடுகிறது. முதல் ஆண்டில் 200,000, இரண்டாம் ஆண்டில் 500,000, அதன்பிறகு வரும் மூன்று ஆண்டுகளில் தலா ஒரு மில்லியன் என்ற இலக்குகள் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை திட்டத்தில் தெரிவிக்கப்பட்ட இலக்குகளாகும்.

2026 ஒக்டோபர் 29ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் திரு. பேட்ரிக் டெரஞ்சனும் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு. Y. ஜெயச்சந்திரனும் இத்திட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தனர். திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும்போது, பங்காளர்கள் பாடசாலைகளுடனும் கல்வி அதிகாரிகளுடனும் இணைந்து செயல்படுவார்கள். ஆரம்ப மாதிரித் திட்டத்துக்காக வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலிருந்தும் தலா ஒரு பாடசாலை என ஐந்து பாடசாலைகளைத் தெரிவுசெய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

ஜப்பானிய நன்கொடையாளரின் ஆதரவு, மாவட்டம் D5-இன் லயன்ஸ் தலைவர்களின் வழிகாட்டுதல், லயன்ஸ் மாவட்டம் D12-இன் ஒருங்கிணைப்பு, TMC யாழ்ப்பாணத்தின் கண்காணிப்பு மற்றும் ஆளுநரின் ஆதரவு ஆகியவற்றுடன், மாணவர்கள் தங்களைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழலில் செடிகளை நட்டு, அவற்றைப் பராமரித்து, அவற்றின் மூலம் கற்றுக்கொள்வதற்கான நடைமுறை வாய்ப்புகளை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.



வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் திட்ட விளம்பரப் பொருள் அறிமுகப்படுத்தப்பட்ட தருணம்.



பள்ளித் தோட்டத் திட்டத்தின் விளம்பரப் பொருளுடன் லயன்ஸ் மற்றும் TMC பிரதிநிதிகள்.



பசில் பெர்னாண்டோ:

உயர்குடியினரின் ஆதிக்கத்திலிருந்த சட்டத்தை மக்கள் உரிமைக்கான ஆயுதமாக மாற்றிய மனித உரிமைப் போராளி

கடந்த வாரத் தொடர்ச்சி...

இதற்காகப் பல்வேறு கலந்துரையாடல்கள், பயிற்சிப் பட்டறைகள் மற்றும் செயற்பாடுகள் நடத்தப்பட்டன. ஏனைய நாடுகளின் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் பெற்ற அனுபவங்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்வதற்கான ஏற்பாடுகளும் அடிக்கடி மேற்கொள்ளப்பட்டன. சட்டத்தரணி பசில் பெர்னாண்டோ எளிமையானதும் இனிமையானதுமான மொழியில், எவரும் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் சட்டத்தை விளக்குவதிலும், எழும் பிரச்சினைகளுக்கு மாற்றுத் தீர்வுகளை முன்வைப்பதிலும் மிகுந்த திறமை கொண்டவராக இருந்தார்.



மேலும், அவர் முன்வைத்த பல மாற்றுத் தீர்வுகளும் செயற்பாடுகளும் வெறும் கருத்தாக்கங்களாக மட்டும் இருக்காமல், நடைமுறையில் பயன்படுத்தக்கூடியவையாக இருந்தமை முக்கியமானதாகும். உதாரணமாக, கைது அல்லது தனிநபர் சித்திரவதைச் சம்பவமொன்றின்போது, சில சட்டத்தரணிகள் அல்லது மனித உரிமைப் பாதுகாவலர்கள் நீண்டகாலம் எடுக்கும் சிக்கலான சட்ட நடவடிக்கைகளை முன்மொழிந்தனர். ஆனால், சட்டத்தரணி பசில் பெர்னாண்டோ இலகுவாகவும் விரைவாகவும் நடைமுறைப்படுத்தக்கூடிய மாற்று வழிமுறைகளுக்கு முக்கியத்துவம் அளித்தார்.

அப்போது அவர் முதன்மையாகக் கவனம் செலுத்தியது, காவலில் வைக்கப்பட்டிருந்த அல்லது சித்திரவதைக்கு உள்ளாகியிருந்த நபரின் உயிரைப் பாதுகாப்பதிலேயே ஆகும். சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமெனில், முதலில் பாதிக்கப்பட்டவரைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் அவர் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார்.

மனித உரிமைகள் துறையில் புதிதாக நுழைந்தவர்களாகவும் ஆரம்பகட்டச்

செயற்பாட்டாளர்களாகவும் இருந்த என்னைப் போன்ற பலருக்கு, சட்டம், மனித உரிமைச் செயற்பாடுகள் மற்றும் சிவில் போராட்டங்கள் தொடர்பாகப் புதிய கோணத்தில் சிந்திக்கவும் செயற்படவும் அவர் வழிகாட்டினார். தனக்குத் தெரிந்த அனைத்தையும் எவ்வித ஒளிவுமறைவுமின்றி தாராளமாகப் பகிர்ந்துகொண்டு, எங்களுக்குப் பல ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்கினார்.

அன்றைய காலகட்டத்தில், இன்றைய அளவுக்கு தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவில்லை. அதன் பல்வேறு அம்சங்களும் பரவலாகப் பயன்படுத்தப்படவில்லை. சமூக ஊடகங்கள் குறித்த விவாதங்கள்கூட இடம்பெறவில்லை. அந்தக் காலத்தில் எங்கள் அனைவராலும் "பசில் அண்ணா" என்று அழைக்கப்பட்ட பசில் பெர்னாண்டோ, பல்வேறு துறைகள் தொடர்பாக எங்களுக்கு அறிவூட்டியதுடன், அந்தத் துறைகளில் மேலும் ஈடுபடுவதற்கும் எங்களை ஊக்குவித்தார். அதேவேளை, ஒருபோதும் புறக்கணிக்க முடியாத தகவல்களின் பெரும் தொகுப்பையும் அவர் முறையாக ஒழுங்குபடுத்தி வழங்கினார்.

குறிப்பிட்ட துறை தொடர்பாக அவர் கொண்டிருந்த அறிவையும் அனுபவத்தையும் என்னைப் போன்ற இளம் செயற்பாட்டாளர்களுக்குப் பகிர்ந்துகொள்வதற்காக, மணித்தியாலக் கணக்கில் மட்டுமன்றி அரைநாள் முழுவதும் நீடித்த நட்புறவான உரையாடல்களையும் கலந்துரையாடல்களையும் நடத்தினார்.

மனித உரிமைகள் துறையில் புதிய அணுகுமுறைகள், சட்டம் நவீனமயப்படுத்தப்பட வேண்டிய பகுதிகள், சட்டங்கள் மட்டுமன்றி பாரம்பரியமாக வேரூன்றியிருந்த நீதிமன்ற நடைமுறைகளில் சாதகமான மாற்றங்கள் செய்யப்பட வேண்டிய இடங்கள் ஆகியவற்றையும் அவர் எங்களுக்கு விளக்கினார். இதற்காக, அந்தத் துறைகளில் அவர் ஏற்கனவே பெற்றிருந்த சர்வதேச அளவிலான அனுபவங்களையும் முதிர்ச்சியையும் பயன்படுத்தினார். இத்தகைய விடயங்கள் தொடர்பாக எங்களிடையே எழுந்த கேள்விகளையும் தெளிவற்ற அம்சங்களையும் மிகுந்த திறமையுடனும் தர்க்கரீதியாகவும் விளக்குவதில் அவர் இயல்பாகவே சிறந்தவராக இருந்தார்.

ஒரு சிறந்த மனிதரின் மறைவு

சட்டத்தரணியாகவும், சர்வதேச அளவில் குற்றவியல் நீதித் துறையில் அரசுத் தரப்பு சட்டத்தரணியாகவும், உண்மையான மனித உரிமைப் போராளியாகவும் விளங்கிய அவர், திறமையான கவிஞராகவும் பல்வேறு துறைகள் தொடர்பான பரந்த அறிவைக் கொண்ட நூலாசிரியராகவும் இருந்தார். சட்டம், சட்டச் சீர்திருத்தங்கள் மற்றும் சமூகத்தில் அன்றாடம் காணப்படும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக எளிமையான மொழியிலும் புறக்கணிக்க முடியாத தகவல்களுடனும் பல நூல்களை அவர் வெளியிட்டுள்ளார்.

சாதியவாதத்தையும் மதவாதத்தையும் கடுமையாக நிராகரித்த அவர், கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவராக இருந்தபோதிலும், சட்டம் மற்றும் சமூக விடுதலை என்ற கருத்தாக்கத்தைப் பொறுத்தவரையில் மதத்தை இரண்டாம் நிலையில் வைத்துச் செயற்பட்டார் என்பதை அக்காலத்தில் அவருடன் பழகிய எம்மில் பலர் அறிவோம். எவ்வாறாயினும், இலங்கையிலிருந்து உருவான மற்றுமொரு தலைசிறந்த மனிதநேயவாதி தனது வாழ்வுப் பயணத்தை நிறைவு செய்துள்ளார். அவரது இடைவெளியை நிரப்புவதற்கு இன்னொருவர் உருவாகுவாரா என்ற சந்தேகத்தையும் கவலையையும் இது எம்முன் ஏற்படுத்தியுள்ளது.

மகத்தான பண்புகளும் மனிதநேயமும் நிறைந்த சட்டத்தரணி பசில் பெர்னாண்டோ, எமது வாழ்நாளில் சட்டத் துறையிலும் மனித உரிமைப் போராட்டக் களத்திலும் செயற்பட்ட மிகச் சில புரட்சிகரமானவர்களிலும் பாரம்பரியங்களுக்கு சவால் விடுத்தவர்களிலும் முன்னணியில் இருந்தார்.

இலங்கையில் அவரைக் கடந்து செல்லக்கூடிய ஒருவர் எவரும் தற்போது எமது பார்வைக்குத் தென்படவில்லை.

எனவே, பசில் அண்ணா, உங்களது பயணம் இனிதாக அமையட்டும்.



திருமலை நவம் அவர்களின் 'இராவணன் கோட்டம்' வரலாற்று ஆய்வு நூல் ஒரு அகலப் பார்வை.... (கன்னியா வரலாறு)....



வரலாறு என்பது முன்னர் இருந்த, பேணப்பட்டுப் பாதுகாத்து வந்த, ஒரு மக்கள் கூட்டத்தின் வாழ்வியல்இ பண்பாட்டு அம்சங்களைச் சான்றாதாரங்கள் மூலமாகக் கால வரிசை ஒழுங்கில் கூறுவதாகும். நாகரிமடைந்த மக்களின் கலாசாரம், வாழ்வியல் அம்சங்கள், ஆட்சி அரசியல், சமூக, பொருளாதார விடயங்கள், கடந்த கால நிகழ்வுகள்இ நிறுவனங்கள்இ மாற்றங்களை நம்பகமான சான்றுகளின் அடிப்படையில் அறிவியல் பூர்வமாகவும் முறைசார்ந்தும் ஆராய்ந்து விளக்கும் துறை வரலாற்று ஆய்வு, எனப்படும்.



சின்னத்தம்பி குருபரன்

